# 55 வயதில் இளைப்பாறும் ஊழியருக்கு நிவாரணம்

Registered as a News_Paper in_Ceylon　விலை சதம் 15 ★ ★

போன்: 7199
பொ. அம்பலவாணர்
தங்க வைர
நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் ரோட்,
யாழ்ப்பாணம்.

ஈழநாடு
THE EELANADU
National Tamil Daily
தபால் பெட்டி எண் : 49
போன் : 389
மலர் 12
இதழ் 295
தேசிய தினசரி
யாழ்ப்பாணம் கார்த்திகை 19 ஷவ்வால் 4 வெள்ளிக்கிழமை (4-12-70)

கல்வனைஸ்ட்
தண்ணீர் தாங்கிகள்
[ GL WATER TANK ]
400 கலன்களிலும்
மற்றும் தேவையான அளவுகளிலும்
கிடைக்குமிடம்:-
கதிர் ஹாட்வெயர்ஸ்
11/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7130 தந்தி: KATHIR

## டாக்டர் என். எம். தகவல்



கொழும்பு, வியா. 55 வயதில் இளைப்பாறும் அரசாங்க ஊழியருக்கு நிவாரணம் வழங்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற அரசாங்க ஊழியர் தொழிலாளர் சம்மேளன கூட்டத்தில் பேசிய நிதி அமைச்சர் டாக்டர் என். எம். பெரேரா மேலும் கூறியதாவது: இளைப்பாறுபவரை தவிர அவர் குடும்பத்தில் வேறு ஒருவரும் வேலை பார்க்காமலிருந்தால் அக்குடும்பத்தில் ஒருவருக்கு பொருத்தமான வேலைபெற்றுத்தர அரசாங்கம் ஆவன செய்யும் 55 வயதில் ஓய்வு பெறுபவர்களின் சேவையுடன் 5 வருடத்தை கூட்டி கணக்கிடுவதுபற்றி ஆலோசனை செய்யப்பட்டு வருகிறது.

மந்திரி ரி. பி. இலங்கரத்தின கூறியதாவது: மக்கள் அரசாங்கத்தின் வெற்றியைப் பாதுகாப்பதற்கு அரசாங்க அதிகாரிகள் ஒத்துழைக்க வேண்டும். அரசாங்க அதிகாரிகள் ஒத்துழைக்காவிட்டால் உண்மையான சோஷலிச ஆட்சியை இந்நாட்டில் நிறுவமுடியாது.

வீடமைப்பு மந்திரி பீட்டர் கெனமன் பேசும் போது கூறியதாவது:

மக்கள் அரசாங்கம் தொழிலாளருக்கு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றும் கடந்த காலத்தில் தொழிலாளர்கள் பட்ட கஷ்டங்கள் நீக்கப்படும். முதலாளித்துவத்தை முறியடிப்பதே எமது லட்சியம்.

### இலங்கையில் இன்றுபுனித பாதம் பதிக்கும்

# ஆத்மீகத் தந்தையே வருக! வருக! பரிசுத்த பாப்பரசரே வருக! வருக!

கொழும்பு, வெள்ளி இலங்கை மண்ணில் இன்று இரவு 7-55 மணிக்குத் தமது புனிதபாதம்பதிக்கும் கத்தோலிக்க உலகின் ஆத்மீகத்தந்தை பாப்பரசர் ஆறுவது சின்னப்பரை இலங்கையிலுள்ள லட்சோப லட்சம் மக்கள் 'வருக வருக' என வரவேற்கின்றனர்.

கத்தோலிக்க மக்கள் மட்டுமல்லாது, இந்து, பௌத்த, முஸ்லிம் மக்களும், பரிசுத்த பாப்பரசரை அவர்களுடன் சேர்ந்து வரவேற்கின்றனர்.

இன்று இரவு சரியாக 7-55 மணிக்கு பாப்பரசர் விமானத்தில் ... பெரிய பாதுகாப்பு ஒழுங்குகள் இரண்டாவது முறையாக நடைபெறுகின்றன.

பரிசுத்த பாப்பரசர் இலங்கையில் தங்கும் இரண்டு மணி நேரமும் நிகழும் நிகழ்ச்சிகள்யாவும் செய்திகளாக இலங்கையருக்கும் உலகம் முழுவதற்கும் கிடைக்கும் வண்ணம் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. பரிசுத்த பாப்பரசரின் விஜயம் டெலிவிஷனில் காண்பிக்கப்படும்.

இரத்மலானை விமானநிலையத்திலிருந்து சரியாக பிற்பகல் 7 மணிக்கு மகா தேசாதிபதி திரு வில்லியம் கோபல்லவாவும், பிரதமர் திருமதி பண்டாரநாயக்காவும் விமானமூலம் கட்டுநாயகா விமானநிலையத்தை யடைவர். பரிசுத்த பாப்பரசரின் டி. சி. எலிட்டாலியா விமானம் சரியாக பிற்பகல் 7-55 மணிக்கு நிலத்தைத் தொடும்.

## கத்தோலிக்கருக்கு இன்று விடுதலை

பாப்பரசர் விஜயத்தையொட்டி கத்தோலிக்கருக்கு இன்று விடுதலை நாளாக இருக்குமென அரசாங்கம் அறிவித்துள்ளது ... ரைத் தரிசித்துவிடவேண்டுமென்ற ஆவலுடன் கஷ்டங்களைப் பொருட்படுத்தாமல் திறந்த லொறியிலும், ...

### தன்னிகரில்லா பாப்பரசே! தருக வருகை சாந்தியுற!!



### 15 பேருக்கு எதிராக வழக்கு

வல்வெட்டித்துறை, வியா.

வல்வெட்டித்துறை நாவலடியைச் சேர்ந்த த ஆறுமுகம், க தேவராசா, க புலேந்திரன், ஆ சுப்பிரமணியம், ஊரிக்காட்டைச் சேர்ந்த க அழகன், சி ஈஸ்வரலிங்கப் பெருமாள் சி செல்லமாணிக்கம், த இராசரத்தினம், பி தங்கவேல், பொ சந்தையா, க சந்திரலிங்கம், சி பூபாலராசா, சு நாகராசா, உடுப்பிட்டியைச் சேர்ந்த த சுந்தரலிங்கம், மயிலியதனையைச் சேர்ந்த மு தேவராசா ஆகியோர் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த செ கனகராசா என்பவருடைய கமலவோடை என்னும் காணிக்குள் அத்துமீறிப் பிரவேசித்து ரூபா 1000 பெறுமதி ...

உடுப்பிட்டி கி. ச. தேர்தல்

## 9 வட்டாரங்களில் போட்டியின்றித் தெரிவு

இமையாணன், வியா.

உடுப்பிட்டிக் கிராம சபைக்கு 9 அபேட்சகர்கள்போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். 7 வட்டாரங்களில் நேரடிப்போட்டி நடைபெறும். இதுவரைகாலமாகப்போட்டியின்றி அனுப்பப்பட்ட 22-ம் வட்டாரத்திற்கு இம்முறை இருவர் போட்டியிடுகின்றனர். அபேட்சகர்கள் விபரம் பின்வருமாறு:-

1-ம் வட்டாரம்: வி கிருஷ்ணபிள்ளை (போட்டியில்லை), 2-ம் வட்டாரம்: கே குலசிங்கம் (போட்டியில்லை, 3ம் வட்டாரம்: கே இரத்தினம் (போட்டியில்லை) 4ம் வட்டாரம்: இ தணிகாசலம் (போட்டியில்லை), 5ம் வட்டாரம்: வி கதிரித்தம்பி (போட்டியில்லை) 6ம் வட்டாரம்: ரி பரமசாமி, ஏ தனபாலசிங்கம், வி செல்வரத்... கள், எம் துரைசாமி, பி. நாகலிங்கம், வி வெள்ளையன், எஸ் முத்துலிங்கம். 11ம் வட்டாரம்: கே தளையசிங்கம், ரி ஸ்ரீஸ்கந்தராசா ஏ நடராசா, ரி கதிர்காமநாதன், 12ம் வட்டாரம்: பி கணேஷ், ரி சின்னத்தம்பி. 13ம் வட்டாரம்; எஸ் கனகலிங்கம், சி கந்தையா, 14ம் வட்டாரம்: ஆர் நடராசா, எஸ் சுந்தரலிங்கம், எஸ் ரத்தினசாமி, 15ம் வட்டாரம்: மா விஜயரத்தினம் போட்டியில்லை, 16ம் வட்டாரம்: எஸ் சிவபாலசிங்கம், ஈ விருதாசலம், 17ம் வட்டாரம்; கே தம்பிராசா எஸ் சோமசுந்தரம், வி எஸ் நடராசா, எஸ் சிவபாதசுந்தரம், ஈ செல்லப்பா. 18ம் வட்டாரம்: ரி கிருஷ்ணபிள்ளை (போட்டியில்லை), 19ம் வட்டாரம்: என் கந்தசாமி (போட்டியில்லை, 20ம் வட்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளும், பாப்பர
சரை அவர்களுடன் சேர்ந்து வரவேற்கின்றனர்.

இன்று இரவு சரியாக 7-55 மணிக்கு பாப்பரசர் விமானத்தில் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் வந்து இறங்குவார். சந்திர முக்கியத்துவம்வாய்ந்த இந்த நிகழ்ச்சியில் 8 லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் கலந்துகொள்வார்களென எதிர்பார்க்கப்படுகிறது. இரண்டு மணிநேரம் பாப்பரசரை மக்கள் தரிசிக்கக் கூடிய விதத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகளை அரசாங்கம் செய்துள்ளது. இதற்கான ஒத்திகையும் நேற்று நடந்துமுடிந்துள்ளது.

கட்டுநாயக்கா விமான நிலையத்துக்குச் சென்று தரிசிக்க முடியாதவர்கள் பாப்பரசர் கட்டுநாயக்காவில் திருப்பலிப் பூசையை நடாத்தும்போது வழங்கும் ஆசீர்வாதத்தை வீட்டிலிருந்து பெறக்கூடியபடியும் சலுகையைச் செய்துள்ளார்கள். பாப்பரசர் வானொலியில் இருமணி நேரமும் மூன்று சேவைகளில் உடனுக்குடன் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாகும்,

பாப்பரசர் விமானத்தை விட்டு இறங்கியதும் கவர்னர் ஜெனரல் முதலில் சென்று அவரை வாழ்த்தி வரவேற்பார். அங்கிருந்து அவரை மேடையொன்றுக்கு அழைத்துச் செல்வார். அப்போது வத்திக்கான். இலங்கை தேசியக் கீதங்கள் முழங்கும். கவர்னர் ஜெனரல் இலங்கைப் பிரதமரை பாப்பரசருக்கு அறிமுகம் செய்துவைப்பார்.

இதன் பின்னர் பொதுநிர்வாக அமைச்சர் திரு பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா கர்த்தினல் தோமஸ்குரே ஆண்டகை, தபால்தந்தி மந்திரி திரு செல்லையா குமாரசூரியர் ஆகியோரை பிரதமர் அறிமுகம் செய்து வைப்பார்.

## உலகெங்கும் ஒலிபரப்பப்படும்

விசேஷமாகத் தயாரிக்கப்பட்டுள்ள டி. சி. எலிட்டா லியா விமானத்தில் பாப்பரசர் வருகிறார்.

பாப்பரசரைத் தரிசிக்கக் கட்டுநாயக்காவிற்குச் செல்லும் பொதுமக்கள் ஒழுங்காகவும் கட்டுப்பாடாகவும் கண்ணியமாகவும் நடந்துகொள்ள வேண்டுமென்று கத்தோலிக்க தலைமைப் பீடம் வேண்டுகோள்விடுத்துள்ளது.

எலிசபெத் மகாராணியின் விஜயத்திற்குப் பின்னர் இலங்கையில் இவ்வாறான

பாப்பரசர் விஜயத்தையொட்டி கத்தோலிக்கருக்கு இன்று விடுதலை நாளாக இருக்குமென அரசாங்கம் அறிவித்துள்ளது.

இன்று இரவு வரும் பாப்பரசரைத் தரிசிப்பதற்காக இப்பொழுதிலிருந்தே ஆயிரக்கணக்கான மக்கள் கட்டுநாயக்கா விமானநிலையத்தைச் சுற்றிய பகுதிகளில் முகாமிட்டு இருக்கத் தொடங்கியுள்ளார்கள். பெண்கள், சிறுவர்கள், பெரியோர்கள் பாப்பரசரைத் தரிசித்துவிடவேண்டுமென்ற ஆவலுடன் கஷ்டங்களைப் பொருட்படுத்தாமல் திறந்த லொறியிலும், பஸ்களிலும், தேவாலயங்களிலும் தங்கியுள்ளனர்.

இன்று காலை 8 மணிக்கே கட்டுநாயக்கா விமானநிலையத்தின் வாசல் கதவுகள் திறந்துவிடப்படும்.

சர்வதேச விமானங்கள் ரத்மலானை விமான நிலையத்துக்குத் திருப்பி அனுப்பப்படுகின்றன. (சி. பி. ஏ)

# வெள்ளிப் பேழையில் யாழ். மாநகரசபை வாழ்த்து

புனித பாப்பரசர் ஆருவது சின்னப்பர் அவர்களிடம் யாழ் மாநகராட்சி மன்றத்தின்சார்பில் வெள்ளிப்பேழையில் வைக்கப்பட்ட வாழ்த்துரையை யாழ். நகர முதல்வர் திரு. ரி. எஸ். துரைராஜா இன்று வழங்குவார். பாப்பரசருக்கு வழங்கப்படும் வாழ்த்துரை வருமாறு.

புனித ஆத்மீகத் தந்தையே! யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற முதல்வரும் உறுப்பினர்களுமாகிய நாம் யாழ்ப்பாண மக்கள் சார்பில், வாஞ்சை மிகு எம் தாயகமான இத்தீவுக்கு வரலாற்று நிகழ்ச்சியான புனிதரின் இவ்வருகையின்போது. பற்றுறுதியும், பயபக்தியும் இணைந்த பணிவான எமது மென்மை உணர்ச்சிகளை மாண்புறு தங்கள் திருச்சமுகத்திற்குத் தெரியப்படுத்த இறைஞ்சுகிறோம். மிக நுட்பமாகச் சொல்லுமிடத்து பாப்பரசர் வாழ்க்கையின் நிலையான வழக்கத்தைக் கைவிட்டு, நவயுக வாழ்க்கைக்கு முற்றிலும் பொருத்தமான இடம் பெயர்வாற்றலால் "தலந் திரிகரு பாப்பரசர் ஆக" எண்ணுக்கடங்காத நாட்டின மக்களுடைய பேரன்பிற்குப் பாத்திரமானீர்கள். தங்களின் கீழைத்தேச வருகை. பாப்பரசர் நிலைசார்ந்த புனிதரின் இதயத்திற்கு மிகவும் பிரீதியான, ஆசிய மக்களது சமூக பொருளாதார முன்னேற்றத்திற்கு முன்னறிவிப்பாக அமையட்டும். உலக சமாதானத்திற்கும், உலக சுபீட்சத்திற்கும் தொடர்ச்சியாக தளராது நீடித்து ஆற்றும் தங்கள் அருஞ்செயலை நாம் சிறப்பாகப் புகழ்ந்து போற்றுகிறோம்.

எமது மக்கள்மீது மகா புனிதராகிய தங்கள் ஆசிர்வாதங்களைச்சொரியவேண்டுமென வேண்டிக்கொண்டு அதிமேன்மை தங்கிய யாழ்ப்பாண மேற்றிராணியார் அதி' வண. டாக்டர் ஜே எமிலியானுஸ்பிள்ளை ஓ.எம் ஐ. ஊடாக எமது இதயபூர்வமான நல்வாழ்த்துக்களையும், வணக்கங்களையும் தெரிவித்துக்கொள்ள அவாவுகிறோம்.



நீதிவழி நெஞ்சத்தின் நினைவு நிற்க
நேரியமா நெறிகொண்டே நிலைமை ஓங்க
தீதகற்றி மனிதகுலப் பாவம் போக்கச்
சிலுவையினைச் சுமந்திளைத்த ஏசு நாதர்
போதனையின் புனிதமதை பூமிக் காக்கும்
புண்ணியரே பாப்பரசே! ஈழம் ஞானப்
பாதைவழி படர்ந்தொருமைப் பண்பு பெற்றே
பயன்காண வருகவென்றே வாழ்த்து கின்றோம்

இ நா.

# ஆனந்தாகல்லூரிவிவகாரம்: விசாரணைக்கு அமைச்சர் உத்தரவு

கொழும்பு, வியாழன்

கொழும்பு ஆனந்தாக் கல்லூரிக்கு மாணவர்கள் தெரிவில் பெருமளவில் ஒழுங்கீனங்கள், நடந்திருப்பதாகக் கூறப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுகள் பற்றி உடனடியாக விசாரணை நடத்தும்படி கல்வி அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

வெகு தொலைவில்வாழும் அநேகபெற்றோர்கள் பொய்யான முகவரிகளைக் கொடுத்து தமது பிள்ளைகளை இந்தக்கல்லூரியில் சேர்த்திருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. கல்லூரியின் அருகிலுள்ள ஒரு பாழடைந்த கட்டிடத்தின் முகவரியை ஒரு பெற்றோர் கொடுத்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றதாம். அந்தக்கட்டிடத்திற்கு ஜன்னல்களோ கதவுகளோ கூரைரோ கூட இல்லையாம் இந்த கல்லூரிக்கான மாணவர்கள் தெரிவு மக்கள் கமிட்டியால் தான் செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது. (சி பி. ஏ)

## "ஒருமித்த முயற்சி அவசியம்"

யாழ்ப்பாணம். வெள்ளி

"தனியொருவரின் வாழ்க்கை பயனுள்ளதாய், நீடித்ததாய் அமைவதற்குசமூகத்தில் ஒவ்வொருவரினதும் ஒருமித்த முயற்சி இன்றியமையாதது" என்று தென்மராட்சி காரியாதிகாரி திரு. இ. சிதம்பரப்பிள்ளை 1971-ம் ஆண்டுக்குரிய செயற்படு விவசாயத் திட்ட அறிக்கையில் கூறியுள்ளார், (கு. வி. ம.)

# இலங்கை வரலாற்றில் முக்கிய நிகழ்ச்சி

## பிரதமர் செய்தி

கொழும்பு, வியாழன்

பாப்பரசர் ஒருவர் இலங்கைக்கு வருகை தருவது இதுவே முதல்தடவை என்பதால், இது ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியாகும் என்று பிரதம மந்திரி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயகா பாப்பரசர் வருகையை ஒட்டி, கத்தோலிக்க மக்களுக்கு விடுத்த செய்தியில் தெரிவித்திருக்கின்றார்.

ரோமாபுரிக்குச் சென்று பாப்பரசரை நேரில் தரிசிக்க முடியாமல் இருக்கும் ஆயிரக்கணக்கான மக்களுக்கு அவரை இங்கு வசதியாகப் பார்க்க சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு நாம் விஷேடமாக மகிழ்ச்சியுறுவதாகப் பிரதமமந்திரி தெரிவித்திருக்கிறார்.

பாப்பரசர் நீண்ட நேரம் இலங்கையில் தங்குவதை அரசு பெரிதும் வரவேற்கும். என்றாலும் சிலமணி நேரமாவது இலங்கையில் தங்குவதற்கு அவர் ஒப்புக்கொண்டமைக்காக நாம் அவருக்கு கடமைப்பட்டிருக்கிறோம் என்றார் பிரதமர். நம்நாட்டில் வாழும் பல்வேறு சமயங்களுக்கிடையே சகிப்புத் தன்மையும் ஒருமைப்பாட்டையும் இந்த வருகை ஏற்படுத்துமென நம்புவதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ. பி ஏ)

என்பவருடைய கமல லோடை என்னும் காணிக்குள் அத்துமீறிப் பிரவேசித்து ரூபா 1000 பெறுமதியான சுவரை உடைத்ததாகக் குற்றஞ்சாட்டி நீதிமன்றத்தில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மாஜிஸ்திரேட் திரு. கே விக்னராசா வழக்கை வருகிற தைமாதம் 23-ந் திகதிக்கு ஒத்திவைத்தார்.

வட்டாரம்: ... (போட்டியில்லை) ... ரம்: ரி பரமசாமி, ஏ ... பாலசிங்கம், வி செல்வரத்தினம். 7ம் வட்டாரம் ஏ சிசுபாலன் (போட்டியில்லை), 8ம் வட்டாரம்: ஆர் ஆர் தர்மரத்தினம் எம் பொன்னுத்துரை, 9ம் வட்டாரம். எஸ் மார்க்கண்டு. வி சின்னராசா, 10 வட்டாரம்; கே பஞ்சலிங்கக் குருக் ... டாரம். ஏ செல்லத்தம்பி ... டாரம் வி திருநாவுக்கரசு எஸ் தர்மலிங்கம், கே அப்புக்குட்டி, 22ம் வட்டாரம்; பி ஐயாத்துரை, வி மாசிலாமணி

அன்பும், அறமும் ...றோம்

# 'வயதுபோனாலும் அழகக்கோன் திடகாத்திரமாக இருக்கிறார்'

## வாதியின் வழக்கறிஞர் தொகுப்புரை

கொழும்பு, வியாழன்

மன்னார் தொகுதி தேர்தல் ஆட்சேபனை வழக்கு இன்று நீதியரசர் வின்சன்ட் தாமோதரம் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது வாதியின் வழக்கறிஞர் இஸதீன் முகம்மது கியூ. சி. தனது தொகுப்புரையில் பிரதிவாதி தரப்பினர் தேர்தல் காலத்தில் முறையற்ற செல்வாக்கைப் பிரயோகித்தற்கோ வேறு இதுபோன்ற சம்பவங்கள் காரணமாகவோ யாரும் பொலிஸில் முறைப்பாடு செய்யவில்லை என்று கூறினர்.

அவர் மேலும்குறிப்பிட்டதாவது:- இச்செயல்களுக்கு உடனடியாக முறைப்பாடு செய்யவேண்டிய அவசியமில்லை. தேர்தல் காலத்தில் முறைப்பாடு செய்தால், தேர்தல் முடிந்த பின்பே அவ்வழக்கு விசாரிக்கப்படும். அதனால் பயனில்லை என்று கருதியதினாலேயே இப்பொழுது அக்குற்றச்சாட்டைச்சொல்கிறோம்.

திரு. அசீஸ் சம்பந்தப்பட்ட துண்டுப்பிரசுரம் பிரதிவாதியால் வெளியிடப்படவில்லை எனக்கூறினர். அப்படியானால் அதனைவெளியிட்டவர்கள் யார்? அழகக்கோனுக்குத் தெரியாமல் அவரை ஆதரித்து ஒருவர்துண்டுப் பிரசுரம் வெளியிட்டிருக்க முடியாது. திரு அழகக்கோன் தான் தேர்தலில் ஆதரவு தேட வீடுகளுக்குச் செல்லவில்லை எனத்தனது சாட்சியத்தில் கூறினார். இவர் வழக்கறிஞர்தொழில் பார்க்கிறார் அடிக்கடி கொழும்புக்குச் செல்கிறார். தொகுதியில் பல கூட்டங்களிலும், வைபவங்களிலும் அவர்கலந்துகொண்டிருக்கிறார். இப்பொழுது அவருக்கு வயதுபோனாலும் திடகாத்திரமாக இருக்கிறார். களத்தில் இறங்கிவிட்டால் வெற்றி பெறுவதற்கு தன்னால் இயன்றதெல்லாவற்றையும் செய்ய வேண்டுமென திரு. அழகக்கோன் தனது சாட்சியத்தில் கூறியுள்ளார். இப்படிக் கூறியுள்ள ஒருவர், தேர்தலுக்கு ஆதரவுதேட வீடுகளுக்குச் செல்லவில்லை என்று கூறினால் அதனை எப்படி நம்புவது திரு. அழகக்கோனுக்காக வெளிப்படையாக வேலை செய்ய மாட்டேன் என்று அசீஸ் கூறியதாக திரு. அழகக்கோன் தன்சாட்சியத்தில் தெரிவித்திருக்கிறார். பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடிநிற்க கச்சேரியில் அழகக்கோன் தேர்தல் பத்திரத்தைத்தாக்கல் செய்யச் சென்ற பொழுது திரு. அழகக்கோனுடன் அசீஸ் சென்றிருக்கிறார். இப்படிப் பட்டவர் அழகக்கோனுக்காக வேலை செய்யவில்லை என்பதை எப்படித்தான் நம்பமுடியும்என்றார் வழக்கு விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

# தோட்டாவுடன் விளையாடிய இரு சிறுமிகள் படுகாயம்

புதுக்குடியிருப்பு, வியா

தோட்டா வொன்றை விளையாட்டாக நெருப்பில் போட்ட 8 வயதுடைய சிறுமிகள் இருவர் அத்தோட்டா வெடித்ததினால் படுகாயமுற்றனர். இச் சம்பவம் தேவிபுரத்தில் நடந்தது. காயமடைந்த இரு சிறுமிகளும் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

வீட்டில் தனியாக இருந்து விளையாடிக் கொண்டிருந்த பிரஸ்தாப சிறுமிகள் இருவரும் தோட்டாவை எடுத்து எரிந்துகொண்டிருந்த நெருப்புச் சட்டிக்குள் போட்டுவிட்டு பக்கத்திலிருந்து விளையாடிக் கொண்டிருந்ததாகவும் அப்போது நெருப்பில் போட்ட தோட்டா வெடித்து இருவர் கால்களையும் சேதப்படுத்தியதாகவும் தெரிகிறது.

பெற்றோர் இவர்களை உடன் முல்லைத்தீவு ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்சென்றபோது அங்கிருந்து இருவரும் உடன் யாழ்ப்பாண ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

# மழையினால் வீதிகள் சிதைவுற்றன

யாழ்ப்பாணம், வெள்ளி

அண்மையில் பெய்த கடும் மழையினால் ஏற்பட்ட வெள்ளத்தினால் யாழ்ப்பாண மாநகரசபை வீதிகள் அரிக்கப்பட்டுக் குண்டும் குழியுமாகக் காட்சி தருகின்றன.

வீதியில் பாதசாரிகளின் கால்களை குறுணிக்கற்கள் உறுத்துவதாகவும், வாகனங்கள் சீராக ஓடமுடியாதிருக்கின்றன வென்றும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

ஆங்காங்கு வீதிகளைச் செப்பஞ் செய்யும் வேலைகள் ஆரம்பமாகியுள்ளன வாயினும் பல வீதிகள் கவனிப்பின்றி அநாதரவாகக் கிடக்கின்றமையால் வாகனங்களுக்கும், வழிப்போக்கர்களுக்கும் சிரமத்தை உண்டாக்குகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

வீடு:
பருத்தித்துறை விநாயக முதலியார் வீதியில், கோடு, காட்லிக்கல்லூரி, சந்தை இவைகளிலிருந்து கூப்பிடு தொலைவில் 3 1/2 பரப்பு நிலமும பழைய ராற்சாரு வீடும் விற்பனைக்குண்டு. ஏறக்குறைய ருபா 30,000/- கொடுத்து வாங்க விரும்புவோர் பின்வரும் விலாசத்தவருடன் தொடர்பு கொள்க. விளம்பரதாரர், 12 A, 1-ம் சப்பல் லேன், கொழும்பு - 6. 2538

நயினாதீவிலுள்ள பள்ளிவாசலுக்கு அண்மையில் சுமார் 25 பரப்பு வருமான தென்னந் தோட்டம் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: பென்சி பெலஸ், மெயின் வீதி, யாழ்ப்பாணம். 2543

### தேவை

கிளிநொச்சித் தொகுதியிலுள்ள விவசாயப் பண்ணைக்கு விவசாயப் பயிற்சி பெற்ற மேற்பார்வையாளர் தேவை. ஆண் பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பங்களை 11-12-70க்கு முன் அனுப்பவும். விலாசம்: சி. கமலநாதன், 190, வட்டக்கச்சி, கிளிநொச்சி. 2544

### தவறிவிட்டது

9-11-70 காலைபருத்தித்துறையிலிருந்து 7-15 மணிக்குப் புறப்பட்டு யாழ்ப்பாணத்திற்கு உடுப்பிட்டியினூடாக வந்த கடுகதிபஸ் வண்டியில்பிரயாணம்செய்த ஆசிரியை ஒருவரது தங்கச் சங்கிலியுடனுன ரோமர் கைக் கடிகாரம் தவறிவிட்டது. 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைப்போருக்கு தகுந்த வெகுமதியளிக்கப்படும். 2547

## பொதுமக்கள் உதவினர்

சுழிபுரம், வியாழன்
சுழிபுரம் கிராமசபை 13-ம் வட்டாரத்திலுள்ள காலையடியைச் சேர்ந்த அறுபதுக்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு இப்பகுதி மக்கள் இலவச அரிசி விநியோகம் செய்தனர். பொது மக்களிடம் திரட்டப்பட்ட பணத்தைக் கொண்டு இலவச அரிசி வழங்கப்பட்டது.

## சாவகச்சேரி நகரசபை

### கேள்விப்பத்திர விளம்பரம்

சாவகச்சேரி 3-ம் வட்டாரம், கெருடாவில் அம்மன் கோவில் வீதி, 700 அடி நீளம் தாபரிப்பு வேலைக்கு இந் நகரசபையில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து கேள்விப் பத்திரம் அழைக்கப்படுகிறது

கேள்விப்பத்திரம் 17-12-70-ந் திகதி நண்பகல் 12-00 மணி வரையும் இந் நகரசபை அலுவலகத்தில் கொடுக்கப்படும். கேள்விப் பத்திரம் காகித உறைக்குள் வைக்கப்பட்டு, உறையின் மேற்பக்கத்தில் இடதுபுறமாக இவ் வேலைக்குரிய பெயரை எழுதி தலைவர், நகரசபை, சாவகச்சேரி என விலாசமிட்டு உறைக்கு மெழுகுபோட்டு அடையாளம் வைத்து 1970-ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 18-ந் திகதி நண்பகல் 12-00 மணிக்கு முன் இந்நகரசபை அலுவலகத்திலுள்ள கேள்விப் பத்திரப்பெட்டிக்குள்போட வேண்டும். அல்லது பதிவு செய்து அனுப்பவேண்டும்

இதைப்பற்றிய விதிகளும் இன்னும் விபரங்களும் அறிய வேண்டின் சபை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

சு. கனகரத்தினம்,
தலைவர்.

நகரசபை, சாவகச்சேரி
நகரசபை அலுவலகம்,
சாவக்ச்சேரி, 27-11-70
2581

## மகஜர்

அம்பன், வியாழன்
நாகர்கோயில் கிராம சேவையாளரது இடமாற்றத்தையும், அம்பன் ஆஸ்பத்திரி அதிகாரியினது இடமாற்றத்தையும் ரத்துச் செய்யுமாறும், நாகர் கோயில் உபதபாற்கந்தோரைத் தரமுயர்த்துமாறும் மேற்படி கந்தோருக்கு ஓர் நிரந்தர தந்திச் சேவகரை நியமிக்குமாறும், நாகர் கோயில் பாடசாலைகளின் நிர்வாகச் சீர்கேடுகளை நிவர்த்திசெய்யுமாறும் கேட்கும் மகஜர் ஒன்றை சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்கும் அதிகாரிகளுக்கும் நாகர் கோவில் தரவை சனசமூக நிலையம் அனுப்பி வைத்துள்ளது.

நாளை

# ஐ.நா. சாஸனத்தை திருத்த கோரிக்கை

நியூயோர்க், டிச. 3
ஐ நா சபையின் சாஸனத்தைத் திருத்தவேண்டும் என்று ஜப்பான், பிலிப்பைன்ஸ் உட்பட ஆறு நாடுகள் கோரிக்கை விடுத்துள்ளன. 25 ஆண்டுகளுக்கு முன்னர் தயாரிக்கப்பட்ட இச்சாஸனத்தை இன்றைய தேவைக்கேற்ப திருத்தியமைக்கவேண்டும் என்று அவை கேட்டுள்ளன.

## 'டிரக்' கவிழ்ந்து 9 பேர் துடிதுடித்து மாண்டனர்!

புதுடில்லி, டிச. 3
ஆந்திராவில் நேற்று 'டிரக்' ஒன்று விபத்துக்குள்ளானதில் 9 பேர் ஸ்தலத்திலேயே துடிதுடித்து மாண்டனர். இந்த 'டிரக்'கில் 35 பேர் பிரயாணம் செய்தனர் வேகமாகப் போய்க்கொண்டிருந்த இந்த 'டிரக்' கவிழ்ந்தது. 9 பேர் படுகாயத்துக்குள்ளானார்கள். இவர்களில் 5 பேர் உயிருக்காகப் போராடுகிறார்கள்.

### மற்றொரு விபத்து

பெங்களூரில் பஸ்தரிப்பு நிலையமொன்றில் பஸ்ஸுக்காக காத்துக் கொண்டிருந்தவர்கள் மீது பஸ் ஒன்று நுழைந்து கொண்டதில் ஒருவர் மாண்டனர். பலர் காயத்துக்குள்ளானார்கள்

## அரபுக்குடியரசு அதிபருடன் ஹுசேன் பேச்சு நடத்துவார்

கெய்ரோ, டிச. 3
ஜோர்டான் மன்னர் ஹுசேன் ஐக்கிய அராபுக் குடியரசு அதிபர் திரு. சதாத்துடன் கெய்ரோவில் பேச்சுவார்த்தை நடத்தவிருக்கிறார் இவர்கள் மேற்காசியாவின் அரசியல் இராணுவ விடயங்கள் பற்றிப் பேச்சுவார்த்தை நடத்துவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

மன்னர் ஹுசேன் பிரான்ஸ், பிரிட்டன் அமெரிக்கா ஆகிய நாடுகளின் தலைவர்களுடனும் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக அந்நாடுகளுக்கு விஜயம் செய்வார் எனச் செய்திகள் கூறுகின்றன.

ஐக்கிய அரபுக்குடியரசு லிபியா சூடான் ஆகிய நாடுகளின் சமஷ்டியில் சிரியாவும் சேர்ந்து கொள்வதெனச் செய்த முடிவாலேயே மன்னர் ஹுசேன் சதாத்துடன் பேச்சுவார்த்தை நடத்த விருப்பதாக சில அரசியல் அவதானிகள் தெரிவித்தனர்.

இவ்விருவரினதும் பேச்சுவார்த்தையால் இக்குடியரசில் ஜோர்டானும் சேர்ந்து கொள்ளும் சாத்தியக்கூறுகள் இருப்பதாகத் தெரிய வருகிறது.

பரிவுபசார விழா

## ஈழத்து அறிஞரின் புதிய நூல்

லண்டன், டிச. 3
இலங்கைச் சர்வகலாசாலையில் ஆங்கிலப் பேராசிரியராகக் கடமை ஆற்றும் ஜாஸ்மின் குணரெத்ன, ஜேன் ஆஸ்டின் எனப்படும் பிரபல ஆங்கிலப் பெண் எழுத்தாளர் பற்றி புதிய நூல் ஒன்றை எழுதியுள்ளார். 'ஜேன் ஆஸ்டின்' என்ற தலைப்பில் எழுதப்பட்டிருக்கும் இந்நூல் கேம்பிரிஜ் சர்வகலாசாலை பதிப்பகத்தால் இன்று (டிசம்பர் 3ந் திகதி) வெளியிடப்படும்.

ஜேன் ஆஸ்டினது ஆறு முழு நாவல்கள் உட்பட அவரது சகல இலக்கியப் படைப்புகளையும் விமர்சிக்கும் ஒரு அறிமுக ஆய்வுநூலாக இது வெளியிடப்படுகிறது. டாக்டர் குணரெத்தின இலங்கையின் பிரபல ஆங்கிலக் கல்விமான்களில் ஒருவராவர்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

வெள்ளி 4-1/...

# ஏற்றத்தாழ்வுகளை ஒழிக்க ஏதாவது ஒரு விதத்தில் கட்டுப்பாடு! இந்திய நிதி மந்திரி தகவல்

புதுடில்லி, டிச. 3
ஏற்றத்தாழ்வுகளை ஒழிக்க ஏதாவது ஒருவிதத்தில் கட்டுப்பாடுவிதிக்ப்படுமென்று நேற்று லோகசபையில் இந்திய நிதிமந்திரி தெரிவித்தார்.

வருவாயில் ஏற்றத்தாழ்வுகளை இல்லாமல்செய்வதற்கு கிராம நகர மக்களின் சொத்து உடைமைகளில் ஒரு கட்டுப்பாட்டை ஏற்படுத்தவேண்டியேற்படும் என்று அவர் கூறினார்.

எல்லாரது வருவாயையும் ஒரு வரம்புக்குள் கொண்டு வரவேண்டியதன் அவசியத்தை அவர் விளக்கினார்.

நிலம் பகிர்ந்தளிக்கும் விஷயம் குறித்தும் நிதி அமைச்சர் கூறினார்.

## எகிப்திய படகை மூழ்கடித்தனராம்

கெய்ரோ, டிச. 3
எகிப்தியரின் மீன்பிடி படகொன்றை இஸ்ரேலியர் தாக்கி மூழ்கடித்துவிட்டதாக புகார் செய்யப்பட்டுள்ளது.

சூயஸ்கால்வாய்ப் பகுதியில் போர் ஓய்வு நடைமுறைக்கு வந்த பின்னர் இது முதலாவது சம்பவம் என்று கருதப்படுகின்றது.

எகிப்திய படகில் இருந்த நான்கு மாலுமிகளும் கொல்லப்பட்டுள்ளனர்

இஸ்ரேலிய சண்டைக் கப்பல் ஒன்று இந்தப் படகை மூழ்கடித்ததாம்.

## இலங்கைதேயிலை, 'மஸ்கெற்' சாம்ராஜ்ய பொருட்காட்சியில்

லண்டன், டிச. 3
சாம்ராஜ்ய நாடுகள் சங்கத்தின் பொருட்காட்சி ஒன்று அண்மையில் லண்டனில் இடம்பெற்றது. இக்காட்சிக்கு வருகை தந்த பெருந்திரளான மக்கள் இலங்கையின் கைப்பணிப் பொருட்களைப் பார்வையிடுவதுடன் ஈழத்தின் சமையல் கலை பற்றியும் அறிந்து சென்றனர்.

இலங்கையின் காட்சி அரங்கில் சுவையான தேயிலை தொடங்கி உருளைக்கிழங்கு மஸ்கெற் வரையான உணவுப் பொருட்களும் அத்துடன் பல வர்ண வேலைப்பாடுகளையுடைய அழகியகைப்பணிப்பொருட்களும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

20 வருடங்களுக்கு முன்பு தனிப்பட்டவீடு ஒன்றில் ஆரம்பமாகிய இப் பொருட்காட்சி இப்பொழுது பெரிய அளவிலான வருடாந்த வைபவமாக ஆண்டு தோறும் இடம்பெற்று வருகிறது. மற்றும் மாதர் சங்கங்களின் உதவியுடன் ஒவ்வொரு சாம்ராஜ்ய நாடும் தத்தம் காட்சி அரங்குகளை ஒழுங்கு செய்வதுண்டு.

சென்ற வருடம் நடைபெற்ற பொருட்காட்சியில் 800 பவுண்கள் திரட்டப்பட்டது. இப்பணம் ஏழை மாணவரின் கல்விக்கு நன்கொடையாக வழங்கப்பட்டது.

— —

## இடமாற்றம்

யாழ்ப்பாணம், வெள்ளி
வலிகாமம்கிழக்குகாரிதிகாரியாதிகாரி அலுவலகத்தில் கடமையாற்றும் திரு எஸ் விநாயக மூர்த்தி புத்தளம் கச்சேரிக்கும் திரு இரா செல்வத்துரை மட்டக்களப்பு மாவட்ட பதிவாளர் காரியாலயத்திற்கும் திரு என் சந்திரசேகரம் மட்டக்களப்புக் கச்சேரிக்கும் திரு வி நாகமுத்து நுவரெலியாக கச்சேரிக்கும் திரு கே கனகலிங்கம் கொழும்...

## ஆட்சேபம்

யாழ்ப்பாணம், வியாழன்
கிளிநொச்சி விற்பனை இலாகா பொறுப்பதிகாரியாகக்கடமையாற்றும் திரு. ஆ சிவகுலம் வவுனியா விற்பனை இலாகா பொறுப்பதிகாரியாக மாற்றப்பட்டதை ஆட்சேபித்து இப்பகுதி மக்கள் கிளிநொச்சி எம் பிக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

## உபதபால் நிலையம் வேண்டுமாம்

சுழிபுரம், வியாழன்
சுழிபுரம் மேற்கு இருத்தலடிப் பகுதிக்கு ஒரு புதிய உபதபால் கந்தோரை திறந்து தரும்படி அப்பகுதி மக்கள் தபால் தந்தி அமைச்சரிடம் மகஜர் மூலம் கேட்டுள்ளார்.

## விளம்பரம்

### சாவகச்சேரி நகர சபை

சாவகச்சேரி நகர சபைக்கு 1971-ம் ஆண்டு கீழ் குறிக்கப்படும் குத்தகைகளுக்கும் மற்றும் தேவையான பொருட்கள் விநியோகம் செய்வதற்கும் 1970-ம் ஆண்டு மார்கழி மாதம் 17-ந் திகதி நண்பகல் 12-00 மணி வரை சாவகச்சேரி நகர சபைத் தலைவரால் முத்திரை "சீல்" செய்யப்பட்ட விலைக்குறிப்புகள் நகலுடன் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப் பத்திரங்கள் 1970-ம் ஆண்டு மார்கழி மாதம் 16-ந் திகதி நண்பகல் 12-00 மணி வரை இவ்வலுவலகத்தில் பிணைப்பணமும் கேள்விப் பத்திரப் பணமும் கீழ் குறிப்பிட்டபடி செலுத்திப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

கேள்விப் பத்திரத்திற்காகச் செலுத்திய பணம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

கேள்விகள் தலைவர், நகர சபை, சாவகச்சேரி என விலாசமிடப்பட்டு, தபாலுறையின் இடது கை மேல் கோணத்தில் இன்னதற்கான கேள்விப்பத்திரமென்று எழுதப்பட்டு பதிவுக் கடிதத்தின் மூலம் அனுப்பப்பட வேண்டும். அல்லது சபையின் கேள்விப் பத்திரப் பெட்டிக்குள் போடப்படவேண்டும்.

இவைகளைப் பற்றிய விபரங்கள் ஏதாவது தெரிய விரும்பின் அலுவலக நேரத்தில் இந்நகர சபை அலுவலகத்தில் தெரிந்துகொள்ளலாம்.

| | | பிணைப் பணம் | கேள்விப் பத்திரம் |
|---|---|---|---|
| | | ரு. ச | ரு. ச. |
| 1. | வண்டி வான் காலைக் குத்தகை | 50-00 | 5-00 |
| 2. | இரட்டை மாட்டுவண்டி மூலம் இந்நகர சபை எல்லைக்குள் கூட்டப்படும் குப்பைகளை அகற்றுவதற்கு | 25-00 | 5-00 |
| 3. | மின்சார உபகரணங்கள் | 250-00 | 25-00 |
| 4. | அலுவலக பாவனைக்குரிய உபகரணங்களும் அச்சடிக்கப்பட்ட படிவங்களும் புத்தகங்களும் | 50-00 | 10-00 |
| 5. | சுகாதார வேலைப்பகுதிக்குத் தேவையான பொருட்கள் | 50-00 | 10-00 |
| 6. | உத்தியோக உடைகள் | 50-00 | 5-00 |
| 7. | சாவகச்சேரிச் சந்தையிலுள்ள சாணியை அள்ளி எடுப்பதற்கு | 25-00 | 5-00 |

சு. கனகரத்தினம்,
தலைவர்,
நகர சபை அலுவலகம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணத்தைக் கொண்டு இல
வச அரிசி வழங்கப்பட்டது.

கோவில் தரவை சனச...
நிலையம் அனுப்பி...வைத்துள்
ளது.


ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்,

# ஸ்பை இன் ரேம்

(SPY IN ROME)- ஹிந்தி

ராணி (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
எம்.ஜி.ஆர்—லட்சுமி
ஜெயலலிதா — அசோகன்
நடித்த

# மாட்டுக்கார வேலன்

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர் — சுந்தரராஜன்
வாணிஸ்ரீ-சந்திரகாந்தா
நடித்த

# நேர்வழி

கெப்பிட்டல் பிளாஸா மைலன்
திரைகளிலும்
இன்றுவெள்ளிக்கிழமை முதல்

## யாழ். வெலிங்டன்

திரையிலும்
தினசரி பி.ப. 2-30, மாலை 6-30
இரவு 9-30, போயா நாட்கள்
காலை 10-30 மணி

ப. நீலகண்டனின் டைரக்‌ஷனில் உருவாகிய



மக்கள் திலகம்
எம். ஜி. ஆர்
ஜெயலலிதா
வாணிஸ்ரீ



முத்துராமன்
அசோகன், சோ,
ஓ. ஏ. கே. தேவர்
மற்றும்பலர் நடித்த
சத்யா மூவிஸ்

# கண்ணன் என் காதலன்

தயாரிப்பு: ஆர் எம். வீரப்பன்
இசை: எம். எஸ். விஸ்வநாதன்


...ஜோர்டானும் சேர்ந்து கொள்ளும் சாத்தியக்கூறுகள் இருப்பதாகத் தெரிய வருகிறது, ......

## பிரிவுபசார விழா

உடும்பராய், வெள்ளி

நீர்வேலி தெற்கு இந்து கலவன் பாடசாலையிலிருந்து உரும்பராய் சைவத்தமிழ் பாடசாலைக்கு இடமாற்றலாகிச் செல்லும் தலைமைஆசிரியர் திரு. க. சிற்றம்பலத்தின் சேவையைப்பாராட்டி இன்றுமாலை பாடசாலை மண்டபத்தில் பிரிவுபசார விழா நடைபெறவிருக்கிறது.

அன்னாரின் சேவையைப் பாராட்டி வலி கிழக்கு காரியாதிகாரி திரு வ. கந்தப்பிள்ளை கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அதிபர் திரு. இ. க. சண்முகநாதன் உட்படப் பலர் உரையாற்றுவர் மாணவ, மாணவிகளின் கதம்ப நிகழ்ச்சி—களும் இடம் பெறும்.


## ஸ்ரீகாலிங்கன்

இணுவில்
தினசரி 6-30, 10-00
போயா நாட்கள் 2-30
எம். ஜி. ஆர். -சரோஜாதேவி
நடித்த

## தாய்க்குத் தலைமகன்

## வெஸ்லிசினிமா

மானிப்பாய்
தினசரி 2-30, 6-30, 9-30
சிவாஜி—பத்மினி
நடித்த

## தில்லானா மோகனாம்பாள்

REGAL
Jaffna
Daily 4 Shows
THE MAN FOR ALL SEASON
The Life Story of
Sir Thomas Moore:
The Archbishop of
Canderbery
கன்டபெறி ஆர்ச். மேற்ராணியார் சேர் தொமஸ் மூரின் வாழ்க்கை வரலாறு ஒவ்வொரு கிறிஸ்தவரும் கட்டாயம் பார்க்கவேண்டிய படம்

2nd to 15th
MANOHARA
Jaffna
Daily 4-45, 7 & 9-45 p m.
Poya days 4 shows
Michael Caine
Noel Coward
in
"THE ITALIAN JOB"
(Panavision-color)
Passes & concessions
suspended for one week
Telephone- 485


## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### வெள்ளி 4-12-70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 இஸ்லாமியநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 துதிப்பாடல்கள், 7-45 திரைகானம், 8-00 இஸ்லாமியகீதங்கள்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 சித்திர கானம், 1-00 கதம்ப இசை.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 கல்வி ஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 மாணவர்மன்றம்.

இரவு6-15 இசைப்பயிற்சி, 6-30 பஜனை, 7-00 வயலின், 7-45 பாப்பரசர் விஜயம்—நேர்முகவர்ணனை, 10-00 நேயர்விருப்பம், 10-30செய்தித்தொகுப்பு.

— —

## கும்பாபிஷேகம்

வல்வெட்டித்துறை, வியா

பருத்தித்துறை கோர்ட்டடி பிள்ளையார் கோவில மகா கும்பாபிஷேகம் இம்மாதம் 18ஆம் திகதி நடைபெறும்.

—

## இடமாற்றம்

வல்வெட்டித்துறை, வியா.

பருத்தித்துறை, சாவகச்சேரி, கிளிநொச்சி ஆகிய மாஜிஸ்திரேட் நீதிமன்றங்களில் கடமையாற்றி வரும் மாஜிஸ்திரேட் திரு. கே விக்னராசா அடுத்தமாதம் 1 ம் திகதி தொடக்கம் அவிசாவளை மாஜிஸ்திரேட் நீதிமன்றத்திற்கும், அவரது இடத்திற்கு அவிசாவளை மாஜிஸ்திரேட் ஜே. டி. ஆசிர்வாதமும் இடமாற்றப் செய்யப்பட்டுள்ளனர்.

0 0 0

ஒட்டுசுட்டான், வியா.

ஒட்டுசுட்டான் உபதபால் நிலையத்தில் தந்தித் தொலைபேசி திருத்த ஊழியராகக் கடமையாற்றிய திரு.பொ. கந்தசாமி என்பவர் ஏழுவருட சேவையின் பின இம்மாதம் 1-ம் திகதிதொடக்கம் வவனியா தந்திக் கந்தோருக்கு இடமாற்றம் பெற்றுள்ளார். அவரின் சேவையைப் பாராட்டி ஒட்டுசுட்டான் உபதபால் கந்தோர் அதிபரும் ஊழியரும் தேநீர் விருந்தளித்து உபசரித்தனர்.

20 வருடங்களுக்கு முன்பு தனிப்பட்டவீடு ஒன்றில் ஆரம்பமாகிய இப் பொருட்காட்சி இப்பொழுது பெரிய அளவிலான வருடாந்த வைபவமாக ஆண்டுதோறும் இடம் பெற்று வருகிறது. லண்டனிலுள்ள ...ம் ராஜ்ய ஸ்தானிகராலயங்

## இன்றைய பலன்

கார்த்திகை மீ 19-ந் திகதி
(4-12-70)

மேஷம்- இலக்கிய ரசனையுடன் இசையிலும் பிரியம் ஏற்படும். நாடகக் கலைஞர்களுக்குப் பொன்னான தினம்,

ரிஷபம்- ஆயுதபீடைக்கு இடமுண்டு. அவசரப் போக்கைத் தவிர்க்கவும். தவறான பாதையக் காட்டுவதற்கு எதிரிகள் காத்திருப்பர்.

மிதுனம்- இன்பம் உங்களைத் தாலாட்டும். புதிய உறவுமுறைகளால் மகிழ்ச்சி அடைவீர்கள்:

கடகம்- சங்கடங்களின் மத்தியில் சஞ்சலப்படுவீர்கள். உங்கள் பலவீனத்தை மற்றவர்கள் ஆயுதமாகப் பயன்படுத்த முனைவர்.

சிம்மம்- நிதியில் அபிவிருத்தியுடன் நிம்மதி பிறக்கும். பந்துக்கள் கொண்டாட்டமும் விருந்தும் உண்டு.

கன்னி- தொழில்துறையில் புதிய வெற்றிகளுக்கு வாய்ப்புண்டு. வெளியிடத்துத் தொடர்புகள் மூலம் ஆதரவு அதிகரிக்கும்.

துலாம்- வணிகத்துறையில் முன்னேற்றம் காணப்படும். நீண்டநாள் கொடுக்கல்வ ங்கல்நிவர்த்தியாகும்

விருட்சிகம்- மனதில் விரக்திநிலை தென்படும், உடல்நலமும் பாதிக்கப்படலாம். கால்நடைகளினால் நஷ்டம்ஏற்படும்.

தனுசு- இனபந்துக்கள் மத்தியில் பூசல்கள் தோன்றும், மனக்குழப்பமச்சலினால் வேதனைப்படுவீர்கள் தெய்வநம்பிக்கை வேண்டும்,

மகரம்- பூமியால் அதிக இலாபம் கிடைப்பதற்கு இடமுண்டு' விவசாயிகள் வாழ்க்கையில் நல்ல மாறுதல் ஏற்படும்.

கும்பம்- குடும்பக் கவலை தலைதூக்கும். பிதாவழிப் பிணிக்கும் இடமுண்டு. மிகச் சுமாரான தினம்.

மீனம்- இலாபகரமான தொழிலில் முதலீடு செய்வீர்கள். வாகனச் சொந்தக்காரர்களுக்கு அதிக வருமானம் கிடைக்கும்

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

...காரியாலயத்திற்கும் திரு என் சந்திரசேகரம் மட்டக்களப்புக் கச்சேரிக்கும் திரு வி நாகமுத்து நுவரெலியாக கச்சேரிக்கும் திரு கே கனகலிங்கம் கொழும்புக் கச்சேரிக்கும் ஜனவரி மாதம் முதல் இடமாற்றம் பெற்றுள்ளனர்.

| | | | |
|---|---|---|---|
| [illegible] | தேவையான பொருட்கள் | 50-00 | 10-00 |
| 6. | உத்தியோக உடைகள் | 50-00 | 5-00 |
| 7. | சாவகச்சேரிச் சந்தையிலுள்ள சாணியை அள்ளி எடுப்பதற்கு | 25-00 | 5-00 |


ச. கனகரத்தினம்,
தலைவர்,
நகரசபை,
சாவகச்சேரி.

நகர சபை அலுவலகம்,
சாவகச்சேரி,
27-11-70.

2584


# சக்தி வாய்ந்த சர்வ பூச்சி நாசினி

# பொலிடோல் ஈ·605



எல்லாக் கிருமிப் பீடைகளையும் இல்லாதொழித்து, பயிர்கள் செழிக்கவும் விளைச்சல் பெருகவும் செய்வது பொலிடோல்.


அழுக்கணவன், ஒட்டுண்ணி, பயிர்ப்பேன், பனிப்பூச்சி, இலையரிப் புழு போன்றவற்றை அது அடியோடு தொலைத்துவிடும்.

நெல், புகையிலை, உருளைக்கிழங்கு, மிளகாய், வெங்காயம், காய்கறி முதலிய எவ்வித பயிர்ச் செய்கையையும் பாதிக்கும் எல்லாவித பூச்சி, புழுக்கள், கிருமிகளையும் அழிக்கும் சக்தி வாய்ந்தது— பொலிடோல்.

100 சீ. சீ. (4 அவுன்ஸ்) விலை— ரூ. 5/50
250 சீ. சீ. (9 அவுன்ஸ்) விலை— ரூ. 11/-
1000 சீ. சீ. (35 அவுன்ஸ்) விலை— ரூ. 37/-

பொலிடோல் ஒரு பேயர் தயாரிப்பு. நம்பிக்கையான விஷயமறிந்த விநியோகஸ்தரிடம் கிடைக்கும். இலவச அறிவுரைச் சேவைக்கு எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

பயிர்களைக் காத்துப் பண லாபம் பெறப் பாவியுங்கள்—
பேயர் விவசாய ரசாயனப் பொருள்கள்,



மூலப் பொருட் சத்து உற்பத்தியாளர்:
பேயர்,
ஜெர்மனி

BAYER

இலங்கையில் தயாரிப்போர்:
ஹேக்கெம் லிமிட்டெட்
400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10.

8.888



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தியத்தின் தனியுருவே!
தன்னிகரில்லாப் பாப்பரசரே
வருக! வருக!!

யாழ்ப்பாணத்தில்
பிரபல
ஜவுளி வியாபாரிகள்
B J. அலோஷியஸ்
32, & 34, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

ஈழநாடு
EELA NADU

பாப்பரசர்
விஜய சிறப்பிதழ்

நத்தாருக்கு
நல்லதோர் பரிசு!

நீங்கள் நீண்டநாளாக எதிர்பார்த்த
யுனிக்
போட்டபிள் றேடியோக்கள்
சிக்கனமான விலையில்
விற்பனையாகின்றன.
V.K. இராசரத்தினம்
95, ஸ்ரான்லி றேட் — யாழ்ப்பாணம்.



ஆட்டை அன்புடன் அணைக்கிறார் அருட்தந்தை

அருட் தந்தையே வருக! வருக!

# தொழிலாளர் நலனுக்காக போராடிய நல்லாயன்!

சாமுவேல் பெனடிக்ற்

சத்திய திருச்சபைக்கு இருநூற்றுக்கு மதிகமான பாப்பரசர்களைத் தந்துதவிய இத்தாலி தேசத்திலே இயற்கையெழில் மிக்க பிரேசிக்கா நகரத்திலே வத்திக்கான் இராச்சியத்தில் வழிவழியாக தொண்டாற்றிய உயர்குலமாகும் மொந்தினி குடும்பத்திலே 1897ம் ஆண்டு அவதரித்தார் சின்னப்ப பாப்பரசர். அன்று பெற்றோர் இட்டுவழங்கிய நாமம் யோன் பப்ரிஸ்ற் மொந்தினிஎன்பது. நாடாளுமன்றத்திலே அங்கத்துவம் வகித்து நாட்டுக்கும் மக்களுக்கும் அருந்தொண்டுகள் புரிந்தவர் இவரின் தந்தையர். இத்தொண்டுகளில் சிறப்பு மிக்கது வத்திக்கானுக்கும்இத்தாலிய அரசாங்கத்திற்குமிடையே நூறுண்டுகளாக நிலவிவந்தபிளவை விலக்கி சமரச உடன்படிக்கை மேற்கொள்ளச் செய்தமையாகும் இதன் பயனகவே பாப்பரசரி வத்திக்கான் இராச்சியத்தின் அரசராக விளங்குகின்றார்.

## இளமையில் கர்த்தரின்பணியில்

யும் அர்ப்பணிக்க எண்ணி பெற்றதாயையும் பிறந்த பொன்னூட்டையும் துறந்து குருக்கள் பயிற்சிக்கூடத்தில் இளமையிலேயே இணைந்து துறவறவாழ்க்கையை மேற்கொண்டார்.

தொடர்ந்து ரோமை நகரின் சிறப்புப்பெற்ற கிரகேரியன் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து தத்துவஇயல்மறையியல், சட்டஇயல் களில் பாண்டித்தியம் பெற்று 23-வது வயதில் குருத்துவாபிஷேகம் பெற்றார் அறிவாற்றலிலும் செயல்திறனிலும் வல்லவரான இக்குருவை வத்திக்கான் தலைமைப்பீடம் ஒருசாதாரண கட்டளைக்குருவாக நியமிக்க விரும்பவில்லை.

## பொறுப்புள்ள அதிகாரியாக

பரிசுத்த பாப்பரசரின் இராச்சியபார மந்திரியாரின் அலுவலகத்தில்பொறுப்புள்ள அதிகாரியாக மொந்தினி குரவர் நியமிக்கப்பட்டார். கத்தோலிக்க குருக்களைப் பயிற்றும் போந்திபிக்கல் கழகத்திலும் இடையிடையே சொற்பொழிவு நடாத்த அழைக்கப்பட்

மொந்தினி அனுப்பப்பட்டார். சிலகாலம்அங்கு பணியாற்றிய மொந்தினி உடல் நலக் குறைவால் மீண்டும் வத்திக்கானுக்கே வந்து சேர்ந்தார் மீண்டும் பல்கலைக்கழகத்தில் தத்துவஇயற் பேராசிரியராகக் கடமையாற்றத் தொடங்கினார். பெனிட்டோ முசோலினி இத்தாலியின் பிரதமரானதும் பாப்பரசருக்கும் இத்தாலிய சக்கரவர்த்திக்குமிடையே ஒருமைப்பாடு ஏற்பட வழிவகுத்தார் என்பது தெரிந்ததே

ஆயினும் முசோலினியின் பாசிசக் கொள்கைகள் சர்வாதிகாரி கிட்லரின்நாஜியக் கொள்கைகளின்மறுபிரதியே என்பது தெரியவந்தது. மொந்தினிகுரவர் பாசிஸத்தின் கொடுமைகளை குருத்துவ மாணவர்கட்குமட்டுமல்ல கட்டுரைமூலமும் இத்தாலி அனைவரும் அறியச் செய்தார்.

## உதவி அமைச்சராக

1937ல் பாப்பரசரின் உதவியமைச்சராகப் பதவி

டுக்குப் பாப்பரசரின் பிரதிநிதியாகச் சென்று மிகச் சிறப்பாகத் தலைமை தாங்கி நடத்தினார்.

## பேராயராக

1954ல் மிலான் நகரப் பேராயர் பதவி மொந்தினிக்கு தரப்பட்டது மிலான் நகரம் தொழிற்சாலைகள் நிரம்பியஒருநகரம் தொழிற்சங்கங்களும் தொழிலாளி முதலாளி பிரச்னைகளும் தினசரிப்பத்திரிகைகளில்மட்டுமல்லவீதிகளிலும் குடும்பங்களிலுமே அலசப்பட்டுக் கொண்டிருக்கும் இந்நிலையில் அதிமேற்றிராணியார் மொந்தினியில் அரும்பணிகள் ஆரம்பமாயின. தொழிலாளர் உரிமைகட்காக போராடத்தொடங்கினார். தொழில் வேறு சமயம் வேறு என்பதல்ல என்பதை எடுத்துக்காட்டி நல்ல கிறிஸ்தவன் எவ்விதம் பணியாளர்களின் உரிமைகளை வழங்க வேண்டும் என ஆணித்தரமாக போதித்தார். தொழிற்சாலைகளில் தொழிலாளர் மத்தியில் அதிமேற்றிராணியாராகிய தாமே ஞாயிற்றுக் கிழமைகளில் பூசைப்பலி

அனுமானங்களை வழங்கியுப் தொழிலாளரின் அன்புக்குப் பாத்திரமானார், தொழிலாளர் சாதாரணமாகப் பாவிக்கும் சைக்கிள் வண்டிகளிலே அடிக்கடி சவாரிசெய்து தொழிலாளர் வீடு சென்று அவர்கள் சுகநல சேமங்களை விசாரிப்பதே அவரின் ஓய்வு நேரப் பொழுது போக்கு ஆகும்.

1958-ல் கர்தினல் ரொங்கேலி, பாப்பரசராகத் தெரியப்பட்டார். திருச்சபையில் மொந்தினி ஆண்டகையையும் கர்தினலாக நியமித்தார். மறுமலர்ச்சிப் பாப்பு என்றழைக்கப்படும் அமரர் அருளப்பர் திருச்சபைக்கு புத்துயிர் தருங் கருமங்களில் செயல்பட்டபோது கர்தினல் மொந்தினி அதற்கு ஆதரவும் ஆக்கமும் அளித்தார்.

## பாப்பரசராக

அமைதியின் அண்ணல், மறுமலர்ச்சிப் பாப்பு அருளப்பர் 1963-ல் இறைவனடியெய்தினார் அருளப்பர் தொடங்கிய பணிகள் சீருற இயங்க வேண்டுமே என கத்தோலிக்க உலகம் அல்லலுற்றது. இந்நிலையில் கர்தினல்மார் அனைவரினதும்

# பாப்பரசரின் மகத்துவம்

இ. மரியவளன்

மனுக்குலத்தை மீட்க மனுவுருவெடுத்தார் இறைமகன் யேசு. தமது மீட்பின் அலுவலைத் தொடர்ந்து செய்யும் பொருட்டுத் திருச்சபையை நிறுவினார். அத்துடன், உலக முடிவுவரை தாம் இத்திருச்சபையோடு இருப்பதாக வாக்குறுதியுமளித்தார். இத்திருச்சபை நிறுவப்பட்டகாலந்தொட்டு அதற்கு எதிராக எண்ணற்ற எதிரிடைகள் எழுந்துள்ளன, அதை அடியோடு அழிக்க அலை அலையாய் எழுந்தனர் எத்தனையோ எதிரிகள். அறிவின் பெயரால், உண்மையின் பெயரால், சீர்திருத்தத்தின் பெயரால் தாக்கினர்; தாக்கியே வந்துள்ளனர் ஈராயிரம் ஆண்டுகளாக ஆனல் தாக்கப்பட்டும், தகர்க்கப்படாமல் தழைத்தோங்கி வளர்ந்துள்ளது திருச்சபை. ஏனென்றால் இறைமகன் இயேசு தாம் வாக்களித்ததுபோல் அத்னேடிருந்து அதைக்காத்து நடத்திவருகின்றார். அவரே திருச்சபையின் தனிமுதற் தலைவர்.

ஆனல் இயேசு திருச்சபையை நிறுவியபொழுது தமதிடமாக அதை ஆண்டு நடத்தும்பொருட்டு புனித இராயப்பரை அதன் தலைவராய் நியமித்தார். நீ கல்லாய் இருக்கிறாய் இந்தக் கல்லின்மேல் என் திருச்

யின் ஆயர் பதவியைப் பெறுபவரே திருச்சபையின் தலைவராக, அதாவது பாப்பரசராகக் கருதப்படுகிறார். இந்த ஈராயிரம் ஆண்டுகளும் தொடர்ச்சியாகப் பல்வேறு பாப்புமார் இத்

திருச்சபையை ஆண்டுள்ளனர். இன்று திருச்சபையை ஆண்டு நடத்தும் பொறுப்பைக் கொண்டுள்ள 6-வது சின்னப்பர் 263 ஆவது பாப்பானவர்.

நன்றி: சத்தியவேத பாதுகாவலன்

றேடியோ பிரச்சனை எதுவாகிலும்
எம்மைக் கலந்து கொள்ளுங்கள்
ஏனெனில்




இத்தொழிலில்
பழமையானவர்கள்
நாங்களே
றேடியோ மனுயல்
23/4, ஸ்ரான்லிறேட் — யாழ்ப்பாணம்.

பொன்னும், பொருளும், போகமும் அல்ல,
அருளும், அன்பும், அறமும்
இரக்கின்றோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திக்கான் இராச்சியத்தின் அரசராக விளங்குகின்ருர்.

### இளமையில் கர்த்தரின்பணியில் ஆர்வம்

ஆரம்பக்கல்வியை மேற் கொள்ளும்போதே ஆயரின் அழைப்பொலி சிறுவன் மொந்தினியின் செவிகளில் ஒலித்தது. கர்த்தரின்பணி யில்தன்வாழ்க்கைமுழுவதை

டார். கத்தோலிக்க குருக்க ளைப் பயிற்றும் போந்திபிக் கல் கழகத்திலும் இடைய டையே சொற்பொழிவு நடாத்த அழைக்கப்பட் டார். திறமைமிக்க இந்த இளம் குருவுக்கு மேலும் பொறுப்புக்கள்தர எண்ணி ஞர் பரிசுத்த பாப்பரசர்.

வார்சோநகரிலிருந்த அப் போஸ்தலிக்க தானுபதியின் பிரதம காரியதரிசியாக

### உதவி அமைச்சராக

1937ல் பாப்பரசரின் உதவியமைச்சராகப் பதவி யேற்ருர் 1938ல் பாப்பரச ரின் நம்பிக்கைக்குப் பாத்தி ரமான மொந்தினி அண்ட கைக்கு ஒரு பெரும் கௌர வம்கிட்டியது. புடாபெஸ் டில் நடந்தேறிய அனைத்து லக நற்கருணை மகாநாட்

மாக போதித்தார். தொழிற் சாலைகளில் தொழிலாளர் மத்தியில் அதிமேற்றிராணி யாராகிய தாமே ஞாயிற்றுக் கிழமைகளில் பூசைப்பலி நடாத்தியும் தேவதிரவிய

தொடங்கிய பணிகள் சீரு இயங்க வேண்டுமே என கத்தோலிக்க உலகம் அல் லலுற்றது. இந்நிலையில் கர் தினல்மார் அனைவரினதும்

(4-ம் பக்கம் பார்க்க)

# 'ஞானத் தந்தையை வாழ்த்துவோம்'

பரிசுத்த திருத்தந்தை 6-வது சின்னப்பர் இலங்கைக்கு வருகை புரிந்தமையை முன் னிட்டு யாழ்ப்பாணக் கத்தோலிக்க மக்கள் சார்பில் அன்னருக்கு வழங்கிய வரவேற்புப்பா.

ஆதிபர ஞனவர்தாம் ஆக்கிக் காத்த
அகிலஉல கனைத்திலுஞ்சேர் பாவம்போக்க
சேயெனும்மெய் ஞானமுற்ற யேசு தன்னை
சீர்பெறவே பாரதனில் மனுவா யீந்து
நீதிசெறி நித்தியனும் நீணி லத்தில்
நிலைத்துமு பத்துமுன் ருண்டு வாழ்ந்து
சோதிபெறு சுவிசேஷச் சொல்ப கர்ந்து
சுகிதர்களாம் பன்னிருவர் சுதனின் பின்னே
நேசமுறு சேவைகளை நிகழ்த்துங் காலம்
நிச்சயித்தார் திருச்சபையின் தலைவ ராக
பேர்பெறுநற் பேதுருவுக் கீந்து பட்டம்
பெரியவன்நீ திருச்சபைக்கே என்ற வாக்கின்
கீழிருந்து நிலவிவரு பாப்பு மார்கள்
கிரமநெறி தவருது அரசு ஓச்சும்
பேர்பெரிய ரோமைநகர் வத்திக் கானில்
பெரியதவ ஞானநிறை தந்தை யான
சீருடைய சின்னப்பர் பாப்பு எங்கள்
சிறந்தலங்கா புரிமருவச் சிறப்புற் ரேமே.
மாஇருளில் ஆதவனின் ஒளியேபோன்று
மக்களெங்கள் மத்தியிலே விழியா லீன்று
தாருமும தாசியெங்கள் வாழ்வி லென்றும்
தர்மநெறி தழைத்தோங்கித் தரணி எங்கும்
சாதிகுண பேதகுறை யாவும் மங்கி
சாந்தமுடன் தயைபொறுமை தானே பொங்கி
நீதிநெறி நிறையாட்சி நிதமே ஓங்கி
நின்வரவால் நெடுங்காலப் புகழே தேங்கி
சோதிநிறை உன்கரத்து ஆசி தாங்கி
சோபனமும் வாழ்த்துதலும் சுரந்தேற் ரேமே

சீர்பெருகு சிறிமாவின் ஆட்சி காலம்
சிறிலங்கா கட்சியதன் முதன்மைப் பீடம்
தேசபிதா வந்திறங்கு விமானக் கூடம்
திகழிலங்கை தேன்மழலை சிந்தும் பாடம்
நாற்றிசையும் நமதுதந்தை பாப்புக் கான
நவரசத்தின் இசைசுவைத்து நவிலுங் கான
கீததுதி செய்துதினம் வாழ்த்து வோமே.

### வாழ்த்து

வாழ்த்துவோம் -- வாழ்த்துவோம்
வத்திக்கான் -- ராயனை
தோத்திரம் நாம்பாடியே தூயவனை - நாடியே]
நாற்றிசையும் கூடியே நம்மரசை வாழ்த்துவோம்
கீர்த்திசேர் ரோமையில் - கிறீஸ்துவின் தொண்டு செய்
பார்த்திபன் பாப்புவாம் - பருகுசின் னப்பரை
போற்றியெம் ஆயர்கள் - பூசகர் கன்னியர்
சாற்றுசந் நாசிகள் - சகோதரர் நாமெல்லாம்
வாழ்த்துவோம் — வாழ்த்துவோம்
வளமோங்க — வாழ்த்துவோம்.

— நவாலியூர் டெனிஸ் யோசேப்.

நடத்தும்பொருட்டு புனித இராயப்பரை அதன் தலைவ ராய் நியமித்தார். நீ கல்லாய் இருக்கிருய் இந்தக் கல்லின்மேல் என் திருச் சபையைக்கட்டுவேன். நர கத்தின் வாயில்கள் அதன் மேல் வெற்றிகொள்ளா. வானத்தின் திறவுகோல் களை உனக்குக்கொடுப்பேன். எதெல்லாம் மண்ணகத்தில் நீ கட்டுவாயோ அதெல்லாம் விண்ணகத்திலும் கட்டப் படுவதாகவே இருக்கும். எதெல்லாம் மண்ணகத்தில் நீ அவிழ்ப்பாயோ அதெல் லாம் விண்ணகத்திலும் அவிழ்க்கப்பட்டதாகவே இருக்கும்'' என இயேசு இராயப்பருக்குக் கூறியதாக மத்தேயுவின் சுவிஷேசத்தில் எழுதப்பட்டுள்ளது. இவ் வாக்கியங்கள் இயேசு இராயப்பருக்கு அளித்த அதிகாரத்தை எடுத்துக் காட்டுகின்றன. ஏனெனில் ஒரு வீட்டின் திறவுகோல் களை ஒருவரிடம் ஒப்படைப் பதின் உட்கருத்து அந்த வீட்டை ஆண்டு நடத்தும் அதிகாரத்தை அவருக்குக் கொடுப்பதாயிற்று' என் பதே: எனவே திருச்சபை யாகிய இறைவனின் இல் லத்தை ஆண்டு நடத்தும் அதிகாரம் இராயப்பருக்கு அளிக்கப்பட்டது என்பது இதனுல் தெளிவாகின்றது.

இயேசு இந்த அதிகாரங் களை எல்லாம் அப்போஸ் தலரான புனித இராயப்ப ருக்கு மட்டும் அளித்தார் என்று எண்ணுவது தவறு. ஏனென்ருல், திருச்சபை இராயப்பரின் வாழ் நாளோடு முடிவடையும் ஒரு நிறுவனமல்ல. இயேசு கூறியுள்ளதுபோல் அது உலக முடிவுவரை நீடித்து நிலைத்து நிற்கவேண்டிய ஒரு நிறுவனம். எனவே இராயப் பரைத் தொடர்ந்து அதை ஆண்டு நடத்துவதற்குத் தலைவர்கள் இருக்கவேண் டும். ஏனெனில் எந்தச் சபையிலும் சமுதாயத்தி லும் பல்வேறு உறுப்பினர் களையும் ஒன்றுபடுத்தி இயக் குவதற்குத் தலைவர்கள் அவ சியம். ஆகவேதான் இயேசு இராயப்பரைத் திருச் சபையின் தலைவராக நிய மித்து அவருக்களித்த அதி காரங்கள் அனைத்தையும் அவருக்குப்பின் திருச் சபையை ஆண்டு நடத்தும் பொறுப்பேற்கும் அனைவருக் கும் அளிக்கிருர். இவ்வாறு திருச்சபையை ஆண்டு நடத்தும் அதிகாரத்தைப் பெறுபவர் பாப்பரசர் என அழைக்கப்படுகிருர்.

புனித இராயப்பர் ரோமைத் தம் ஆட்சிபீட மாகத் தேர்ந்துகொண் டார். எனவே அவரைப் பின்தொடர்ந்து ரோமை


★ நாகரிக வேலைப்பாடுடைய

★ நங்கையர் உருவுக்கு பொலிவூட்டும்

உத்தரவாதமுள்ள

தங்க, வைர நகைகளுக்கு

பேர்பெற்ற ஸ்தாபனம்

ராணி ஆபரண மாளிகை

224, கே. கே. எஸ். வீதி — யாழ்ப்பாணம்.

Manager: A. KARAPUTUGALA.



மக்கள் சிந்தை மகிழத் தந்தையே வருகை தருக!

தங்கள் வரவு நல்வரவாகுக!!

யாழ். றீகல் திரைக்கு வருகின்றது

த ஷூஸ் ஓவ் த பிஷமன்

(THE SHOES OF THE FISHERMAN)

அந்தோனி கின் லோறன்ஸ் ஒலிவர்

ஜோன் கில்கட்

நடித்தது



பொன்னும், பொருளும், போகமும் அல்ல, அருளும், அன்பும், அறமும் இரக்கின்றோம்

எங்கள் ஞானத் தந்தையே

எமக்கருள்வீர்!



கேக் வகைகளுக்குரிய

சகலவிதமான பொருட்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

இன்றே விஜயம் செய்யுங்கள்

கமலா ஸ்ரோர்ஸ்

123, பாங்சால் வீதி — யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7148



மோட்டார் வாகனங்களின்

பெயின்டிங், ரிங்கறிங்

மற்றும் பொதுவான

பழுதுபார்த்தல் வேலைகளுக்கு

ஓட்டோஸ்

லிமிட்டெட்

யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

தொழிலில் மனிதன்தான் முதல் இடம் பெறுகிறான். மனிதனுக்காகவே தொழில் புரிகிறான். எதிர்காலத்தில் தொழில் தொழிலாளிக்கு மேற்பட்டதாயிராது. தொழில் தொழிலாளிக்காகவே. தொழில் மனிதனுக்காகவே. ஒவ்வொரு மனிதனுக்கும், மனிதர் அனைவருக்குமே சேவை புரிவதாகவிளங்கும்

— பாப்பரசர் பரிசுத்த சின்னப்பர்.


# ஈழநாடு

Eelanadu Ceylon Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna:
Post Box: 49 Jaffna Telephone: 889.

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் கார்த்திகை மாதம்
19 ம் திகதி 4-12-70


## பாப்பரசரின் விஜயம்


இன்று டிசம்பர் மாதம் 4-ம் திகதி வெள்ளிக்கிழமை இலங்கையின் சரித்திரத்திலே பொன்னெழுத்துக்களால் பொறிக்கும் திருநாள். ஈழத்திலுள்ள லட்சக்கணக்கான கத்தோலிக்க மக்களுக்குக் குதூகலமான தினம் இதுவரை சரித்திரம் காணாதபடி பரிசுத்த பாப்பாண்டவர் நம் ஈழத்துக்கு விஜயம்செய்து இம் மண்ணைப் புனிதப்படுத்துகின்றார்கள். தள்ளாத வயதிலே அப் புனிதர், வழக்கத்தையும் சம்பிரதாயத்தையும் மீறி இங்கு விஜயம் செய்வதற்காக ஈழப் பொதுமக்கள் சார்பாக அவரை அஞ்சலிக் கரத்துடன் 'வருக வருக' என்று நன்றியுடன் வரவேற்கின்றோம்.

கத்தோலிக்கர் மட்டுமல்ல, மற்ற எல்லாச் சமயத்தவரும் லட்சக்கணக்கிலே அவரது தரிசனத்துக்காக கட்டுநாயகா விமான நிலையத்திலே கூடுகின்றார்கள். மகாதேசாதிபதியும் பிரதமரும் மற்றும் அமைச்சர்களும் பிரமுகர்களும் அவரை வரவேற்கச்செல்லுகின்றனர். யாழ்ப்பாணப் பொதுமக்கள் சார்பிலே மாநகரசபை ஒரு வரவேற்புப் பத்திரத்தை அவருக்கு அனுப்பிவைத்துள்ளதுடன் அவரை நேரில் சென்று கௌரவிக்க மேயர் சென்றிருக்கின்றார். ஈழப் பொதுமக்களிடையே சமய விஷயமாக எவ்வளவு சமரச உணர்ச்சியுள்ளதென்பதற்கும் சமயத்தில் அவர்களுக்குள்ள நம்பிக்கைக்கும் இது நல்ல அத்தாட்சியாகும்.

மணிலாவிலே ஆசிய பிஷப்புகள் மகாநாட்டில் பாப்பரசர் பேசுகையில், ஏழைநாடுகளுக்கும் பணக்கார நாடுகளுக்குமிடையிலுள்ள பெரிய ஏற்றத்தாழ்வுகளைக் கண்டித்தார்.

... டத்தில் ஆசிய பிஷப்புகள் கூடிய ஆதரவளிக்கவேண்டுமென்றும் அறிவுறுத்தினார் உலக ஜனத்தொகையில் பாதிக்கு மேல் ஆசியாவில் வசிப்பதால், இக் கண்டத்தின விஷயமாக திருச்சபை அதிக பங்கு எடுக்கவேண்டுமென்றும், உலகத்திலே தனக்குரிய சரியான இடத்தை வகிக்க ஆசியா அடக்கமுடியாத ஆர்வத்துடன் இருப்பதாயும் அதன் செல்வாக்கு வரவர அதிகரித்துவருவதாகவும் சரியாகத் தெரிவித்தார்கள். இதிலிருந்து ஆசியாவின் இன்றைய பிரச்னைகளை பாப்பரசர் சரியாக உணர்ந்துள்ளாரென்பது தெரிவதுடன் ஆசியா மக்களின் பல பிரச்னைகளையும் நீக்க அவர் தமது பெரும் செல்வாக்கைப் பயன்படுத்தவே இந்தச்சுற்றுப்பிரயாணத்தை மேற்கொண்டிருக்கிறாரென்பதும் அறியக்கூடியதாக இருக்கின்றது

இம் மேலான நோக்கங்கள் நிறைவேற ஆசியா மக்களின் பூரண ஆதரவும் ஒத்துழைப்பும் இருக்குமென்பதைக் கூறத்தேவையில்லை. அரசியல் விடுதலை பெற்றாலும் பொருளாதார விடுதலையை அவை பெறவில்லை. ஆசியா மண்ணில் பல சண்டைகள் நடக்கின்றன சாதாரண மக்கள் அமைதியாக வாழமுடியவில்லை, வாலிப உலகுக்கு இதனால் சமயநம்பிக்கை பெரிதும் குறைந்துவருகின்றது பலாத்காரப் புரட்சி மூலமே இக் குறைகளைத் தீர்க்க முடியுமென்றும், சமயபோதனைகளால் அது முடியாதென்றும் பலரும் நினைக்கின்றார்கள். ஆசியா மக்களின் மேற்குறித்த முக்கிய பிரச்னைகளை உணர்ந்து அவற்றைத் தீர்க்க சமய ஸ்தாபனங்கள் எல்லாம் ஒருமுகமாக முயன்று ஒத்...



ஆறுவது சின்னப்பரின் முடிசூட்டு வைபவம்

# தொழிலாளர் நலனுக்காக

(2- பக்கத் தொடர்ச்சி)
ஆதரவுபெற்று மொந்தினி ஆண்டகை பாப்பரசராக பட்டமேற்றார் ஆறுவது சின்னப்பர் என இவர் தம் பெயரைத் தெரிந்துகொண்டார். கிறிஸ்து மரித்ததன்பின்னால் கத்தோலிக்க மதத்தில் சேர்ந்து வியத்தகு பணியாற்றியவர் புனிதசின்னப்பர் ஆவர். அப்புனித நாமத்தையே தெரிந்துகொண்டு கிறிஸ்துவின் பதிலாளியாக, திருச்சபையின் தலைவராக தொண்டாற்றத் தொடங்கினார்.

முதலில் அருளப்ப ஆண்டகை தொடக்கிய அனைத்துலக ஆயர் பேரவை மகாநாட்டைத் தொடர்ந்து நடாத்தினார். திருச்சபையில் தேவையான இடங்களிளெல்லாம்மறுமலர்ச்சியைப் புகுத்திய இவர் பலிமுறைகள் தேசியமொழி, பண்பாடு என்பவற்றுக்கேற்ப இடம் பெறவேண்டுமென்பதில் முழுமூச்சாக உழைத்தார், சோஷலிஸ நாடுகளின் தலைவர்கள் பாப்பரசர்கள் பணக்கார வல்லரசுகளின் நண்பர் என ஒதுக்கிவந்த நிலையை மாற்றியமைத்தவர் அமரர் அருளப்பர். அவரின் அடிச்சுவடுகளின்வழியே சென்றசின்னப்பரும் யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற கொள்கையைக் கடைப்பிடித்தார்.

### வத்திக்கானுக்குள் என்ற நிலையை மாற்றினார்

பாப்பரசர்கள் வத்திக்... பாத்திமாபதியில் பாலர் மூவர்க்கு பரம அன்னை காட்சி தந்த பொன் விழா வைபவங்களைத் தொடக்கி வைத்து மரியன்னையின் பக்தர்களை மனங்குளிரச்செய்தார்

இருண்ட கண்டமென ஒருகால் வழங்கப்பட்ட ஆபிரிக்கா சென்று வேதசாட்சி முடிபெற்ற புண்ணியர்களின் தலத்தில் பூசைப்பலி நிறைவேற்றி ஆபிரிக்க மேற்றிராணிமார் திருச்சங்கத்துக்கும் தலைமைதாங்கினார். அக்காலை அகில உலகத்தின் கவனத்தையும் தன்பால் இழுத்த பியாப்ரா பிரச்சனையிலும் தலையிட்டு நியாயம் வழங்குமாறு இடித்துரைத்தார்

தென்னமெரிக்காவில் பிரச்சனைகள் நிரம்பிய பிரேசில் தேசம் சென்று நற்கருணை மகாநாட்டுக்குத் தலைமை தாங்கியதுடன் விவசாயிகள் பிரச்சனையிலும் கலந்துகொண்டார்

மிலான் நகரத்தில் தந்தையவர்கள் தொழிலாளிகளுடன் கொண்ட உறவு பாப்பரசரானதும் அற்றுப்போகவில்லை. தங்கள் நண்பர் பாப்பரசராகத் தெரியப்பட்டதும் அவர் சிரசில் சூடுவதற்கென மணிமகுடம் ஒன்றையே மிலான் நகரத் தொழிலாளிகள் சுமந்துவந்தனர். தொழிலாளர் நலன் கருதி இம்மணிமகுடத்தையே கழற்றித் தந்த சின்னப்பர் தொழிலாளர் பிரச்சனைகளில் மேலும் பங்கு

## சிவன்கோயில் திருப்பணி

யாழ்ப்பாணம், வெள்ளி

வண்ணை சிவன் கோயில் புதியராஜகோபுரத்துக்கான பெரியமாற்பாவு கல் இன்று வெள்ளிக்கிழமையன்றுவைக்கப்படும் திருப்பணிவைபவம் நடைபெறுவதாக அறிவிக்கப்படுகிறது.

## கி. சேவையாளர் நியமனம்
### 2 திறமைச்சித்தி மட்டும் போதும்

யாழ்ப்பாணம், வெள்ளி

ஜி. சி. ஈ. சாதாரண பரீட்சையில் 2 பாடங்களில் மட்டும் சித்திபெற்றவர்கள் கிராம சேவையாளர் பதவிகளுக்கு விண்ணப்பிக்கலாம் என தெரிய வருகிறது. இதற்கு விண்ணப்பிப்போர் 4 திறமைச் சித்திகள் பெற்றிருக்க வேண்டும் எனஏற்கனவே அரசாங்கம் அறிவித்திருந்தது,

பின்தங்கிய இடங்களில் உள்ள விண்ணப்பதாரர்களுக்காகவே இவ்வித தகைமை குறைக்கப்பட்டுள்ளதாக அறியவருகிறது.



## பரம்பரை அர்ச்சகர் முறை ரத்து

சென்னை, டிசம்பர் 3

தமிழ்நாடு ஆலயங்களில் அர்ச்சகராக ஒரு சமூகத்தினரே பரம்பரைபரம்பரையாக இருந்து வந்த முறையை ரத்துசெய்வதென தமிழ்நாடு அரசாங்கம் இன்றுமுடிவு செய்திருக்கிறது.

இந்து சமூகத்தைச் சேர்ந்த எவரும் ஆலயங்களில் அர்ச்சகராக கடமையாற்ற கூடிய விதத்தில் இத்தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளது.

## அதிபர் இடமாற்றம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், வியா,

அனலைதீவு சதாசிவ மகாவித்தியாலய அதிபர் திரு. வி விஸ்வலிங்கத்தின் இடமாற்றம் மறு அறிவித்தல்வரை பின்போடப்பட்டுள்ளது திரு. விஸ்வலிங்கம் இம் மாதம் 6-ம் திகதிமுதல் நயினாதீவு மகாவித்தியாலய அதிபராக இடமாற்றஞ் செய்யப்பட்டிருந்தார் இதை ஆட்சேபித்து இப் பகுதி மக்கள் தீவுப்பகுதி எம். பியுடன் தொடர்பு கொண்டதைத் தொடர்ந்து அவர் இவ்விஷயத்தில் தலையிட்டு இடமாற்றத்தை பின்போடுமாறு வடமாநில வித்தியாதிபதியிடம் கேட்டிருந்ததாகத் தெரிகிறது இவ்வித்தியாலயத்திற்கு அதிபர் ஒருவரை நிமமித்த பின்னரே இவரை இடமாற்றம் செய்யவேண்டும் என்று இப்பகுதி மக்கள் எம். பி. யிடம் கேட்டுள்ளனர்,

திரு விஸ்வலிங்கம் ஆசிரியப்பதவிவகித்த 31 வருடங்களில் ஒரு நாட்கூட தமது சொந்த ஊரான நயினாதீவில் சேவையாற்றவில்லை என்றும் நயினாதீவில் தம்மை நியமிக்கும்படியும் கல்வி மந்திரிக்கு அனுப்பிவைத்துள்ள மகஜரில் கேட்டுள்ளார் இவரை நயினாதீவில் நியமிக்கும்படி கோரி நயினாதீவு கிராமசபை உறுப்பினர்கள் ஐந்து பேர் வடமாநில கல்வி அதிபதிக்கு தந்தியென்றை அனுப்பிவைத்துள்ளனர்,

## இடமாற்றம்

நல்லூர், வியா

வலிகாமம் வடக்குக் காரியாதிகாரி பிரிவைச் சேர்ந்த ஏழு கிராமசேவையாளர்கள் ஜனவரி முதலாம் திகதியிலிருந்து இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்.

## ஜெயராஜ் எழுதுவது

கட்டுநாயகாவுக்குச் செல்லவில்லையா? என்று ஓர் அன்பர் கேட்கின்றார். உடல்தான் செல்லமுடியவில்லை. உள்ளம் அங்கேதான் இன்று மாலையிலிருந்து இலங்கை வானொலி பாப்பரசரின் வருகையை யொட்டி விசேஷ அஞ்சல்செய்கின்றது. நிலைய அறிவிப்பாளருடன் வண. பிதா என், எம், சவரிமுத்து, வண பிதா தோமஸ் சவுந்தரநாயகம், வண. பிதா சேவியர் குரூஸ் ஆகியோரும் விளக்கவுரை தருகின்றார்கள் இங்கிருந்தே அவற்றை எல்லாம் கேட்கலாம் என்று இருக்கிறேன். 'டெலிவிஷன்' இருந்தால் அந்தக்காட்சிகளை எல்லாம் இருந்த இடத்திலிருந்தே பார்க்கலாம் அடுத்த முறை பாப்பரசர் இங்கு விஜயம் செய்யும்போது டெலிவிஷன் வசதியும் இலங்கைக்கு வந்துவிடக்கூடும். அதற்கிடையே, இக்காட்சிகளைப் படம் பிடித்து, சினிமாக்களில் காட்டுவதைப் பார்த்து மகிழுவோம்.

0 0 0

பாப்பரசர் பரிசுத்த சின்னப்பருடன் 12 பேர் வருகின்றார்கள். யாரார் தெரியுமா? பிரயாண நிர்வாகி அந்தரங்ககாரியதரிசி, வத்திக்கான் இராச்சிய பார உதவி அமைச்சர், சிறப்பு மருத்துவர், வத்திக்கான் வானொலி அறிவிப்பாளர். வத்திக்கான் தினசரிப்பத்திரிகையான "ரோமன் அவதானி"யின் பிரதம ஆசிரியர், பாப்பரசரின் புகைப்படப் பிடிப்பாளர், மெய்க்காப்பாளர், பாப்பரசரின் படைத்தலைவர், பாப்பரசரின் படையணியினர் மூவர். இவர்கள் பன்னிருவரும் தான் பாப்பரசரின் யாத்திரைக்குழுவினர்.

ஆமாம் பாப்பரசருக்கு ஒரு தனிப்படையுண்டு. சுவிட்சலாந்து நாட்டைச் சேர்ந்தவர்களே அதில் அங்கம் வகிக்கிறார்கள் வத்திக்கான் மாளிகையில் பாப்பரசர் தரிசனம் அளிக்கும் போது, கூட்டத்தில் இருந்த யாரோ ஒருவர் புகைப்படம் பிடிக்க 'பிளாஸ்லைற்' அடித்தார் உடனே அவரது படையைச் சேர்ந்த ஒருவர் அங்கு பாய்ந்தோடிச் சென்று, 'போட்டோ கமெரா'வைக் கைப்பற்றி, அதிலிருந்த 'பிலிம்'மை

...கின்றார்கள். ஆனால் அவர்களிடம் துப்பாக்கி எதுவும் காணவில்லை!

0 0 0

பாப்பரசரின் வருகையை முன்னிட்டு கத்தோலிக்க வார வெளியீடான 'சத்திய வேத பாதுகாவலன்' ஒரு நல்ல விசேஷ மலரை வெளியிட்டுள்ளது. பாப்பரசரைப் பற்றியும் அவரது புனித யாத்திரை பற்றியும் பல அரிய கட்டுரைகளும் விவரங்களும் அதில் வெளியாகியுள்ளன.

இளமைப் பருவத்திலே சின்னப்பபாப்புவைப்பற்றிய சில ருசியான விஷயங்கள் இதில் உள்ளன, சின்ன வயதில் அவர் பெயர் பப்ரிஸ்ரா அவரது அயல்வீட்டுக்காரப் பையன் தன் பூனையின் வாலிலே ஒரு வெண்கலத் தட்டைக் கட்டிவிட்டான். பூனையோ பயத்தினால் அங்குமிங்கும் ஓட ஆரம்பித்தது தெருவில் வெண்கலத் தட்டின் சப்தம் வேடிக்கை பார்க்க சிறுவர்கள் கூடிவிட்டனர். பூனையோ வேதனையால் துடிதுடித்தது சிறுவன் பப்ரிஸ்ராலோ அதன் பரிதாபத்தைக் கண்டு அதை விடுவிக்க முயன்றார். அயல்வீட்டுப் பையன் அதை எதிர்த்தான் இருவரும் கைபரிமாறிக் கொண்டனர். பப்ரிஸ்ராவின் கோபத்தை அன்றுதான் பார்த்தேன் என்று அவரின் நண்பர் ஒருவர் கூறுகிறார். ஒரு பூனைக்குட்டிக்கு கருணைகாட்டியவர் மனிதருக்காக எவ்வளவு கருணைகாட்டுவார்.

இன்னும் அம் மலரில் பல ருசியான பயனுள்ள செய்திகள் அடங்கியுள்ளன,

0 0 0

பாப்பரசா பரிசுத்த சின்னப்பர் தமக்கு அடுத்தபடியாக வத்திகான் காரியதரிசியான கருதினால் வில்லாட்டை தமது வாரிசாக வரவிரும்புவதாக லண்டன் 'சண்டே டைமஸ்' பத்திரிகை தெரிவிக்கின்றது பாப்பரசின் இந்த விருப்பம்நிறைவேற்றப்பட்டால் 450 வருடங்களுக்குப் பிறகு. 60 கோடி ரோமன் கதோலிக்கருக்கும் இத்தாலியர் அல்லாதஒரு தலைவர் கிடைக்கக்கூடும்' என்றும் அப்பத்திரிகை கூறுகிறது. கருதினால் வில்லாட் ஒரு பிரெஞ்சுக்காரர் வயது 64. தூரகிழக்கு பிரயாணத்துக்குப் புற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழைநாடுகளுக்கும் பணக்கார நாடுகளுக்குமிடையிலுள்ள பெரிய ஏற்றத்தாழ்வுகளைக் கண்டித்தார். வியட்னும் சண்டையை ஒரு முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமென்று வற்புறுத்திஞர். பசி பட்டினி, ஏழ்மை, அறியாமை, நோய், சமூகக் குறைகள் முதலியவற்றை எதிர்த்து நடக்கும் போராட்

முக்கிய பிரச்னைகளை உணர்ந்து அவற்றைத் தீர்க்க சமய ஸ்தாபனங்கள் எல்லாம் ஒருமுகமாக முயன்று ஒத்துழைத்தால், நல்ல பலன் இடைக்கவேசெய்யும். பாப்பரசரின் இந்த விஜயம் அதற்கு அடிகோல, எல்லாம்வல்ல திருவருள் துணை நிற்க வேண்டுமென்பதே நமது பிரார்த்தனை

# 'இணுவில்புகையிரதநிலையம் அபிவிருத்திசெய்ய கோரிக்கை'

உடும்பராய், வியா.

"நல்லவருமானம் பெறுவதும், கூடிய ஜனத்தொகையை கொண்ட பகுதியில் உள்ளதுமான இணுவில் புகையிரத நிலையம் விரைவில் அபிவிருத்தி செய்யப்படவேண்டும்"

இணுவில் வாசிகள் போக்குவரத்து மந்திரிக்கு அனுப்பியுள்ள மகஜரொன்றில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள்சார்பில் இம்மகஜரை திரு. எஸ். கே. துரைசிங்கம் ஜே. பி. அனுப்பியுள்ளார்.

அந்த மகஜரில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: இப்புகையிரத நிலையத்திற்கு கூரை போடப்படவில்லை. பிரயாணிகள் இதனுல் கஷ்டமடைகின்றனர். தங்குமிடவசதிகூட இங்கில்லை இந்நிலையத்திற்கு சகல வசதிகளையும் கொண்ட புதிய கட்டடமொன்றை அமைத்துத்தரும்படி கோருகிறோம்.

குடிநீர் வசதியும் இந்நிலையத்தில் இல்லை. அயல் கிராமங்களில் உள்ள மக்கள் கடுகதி புகையிரதங்களான யாழ்தேவி, உத்தர தேவியில் பிரயாணம் செய்ய பிரதான நிலையங்களுக்கு செல்லவேண்டியிருக்கிறது.

உடுவில், கோப்பாய், வடடுக்கோட்டை தொகுதி மக்களும் இராமநாதன் கல்லூரி மாணவிகள் உடுவில் பெண்கள் கல்லூரி மாணவிகள், இணுவில மக்லியோட் ஆஸ்பத்திரி, கிறிஸ்தவ சேவ ஆச்சிரமம், மற்றும் இங்குள்ள முக்கிய ஸ்தாபனங்களில் கடமையாற்றுவோர் பிரயாணம் செய்வதில் கஷ்டப்படுகின்றனர்

சங்குவேலி, இணுவில், உடுவில் மருதனுமடம் மாணவர்கள் உட்பட மற்றும் பிரயாணிகளின் வசதிக்காக இப்புகையிரத நிலையத்துடன் தொடர்பாக பஸ் சேவை எதுவும் இல்லை. ஆகலால் காலையிலும், மாலையிலுமாவது, தொடர்பான பஸ் சேவையை ஏற்பாடு செய்து தரவேண்டும்.

பிரயாணிகளின் வசதிக்காக, யாழ்தேவி, உத்தர தேவி, கடுகதி புகையிரதங்கள் இந் நிலையத்தில் நிறுத்துவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் மெயில் வண்டிகளில் பார்சல் அனுப்ப இந் நிலையத்தில் வசதி செய்ய வேண்டும். இம் மகஜரின் பிரதிகள் நியமன எம். பி. திரு எம் ஸி சுப்பிரமணியத்திற்கும், புகையிரத பகுதி ஜெனரல் மனேஜருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

— —

## தட்டுப்பாடு

நயினுதீவு, வியா

நயினுதீவில் தொடர்ந்து ஒரு வாரகால அடைமழையினல் இங்கு மண்ணெண்ணை தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. மக்கள் மழையையும் பாராது போத்தலகள் தகரங்களுடன் கடைக்குக் கடை சென்று ஏமாற்றத்துடன் திருமபுகின்றனர்.

......

## திருப்பி அனுப்பினுர்

கிளிநொச்சி, வியா

பட்டினசபைத் தலைவர் திரு. ச. சு. முருகேசு தமக்கு வந்த பென்ஷன் வவுச்சர் சிங்களத்தில் இருந்ததால் அவர் அதைச் சம்பந்தப்பட்டவர்களுக்குத் திருப்பி வைத்துள்ளார்.

நவம்பர் மாதத்துக்கான இந்த வவுச்சர் தனிச்சிங்களத்தில் எழுதப்பட்டதால் தம்மால் எதையும் புரிய முடியவில்லையென்றும் தமக்குத் தெரிந்த மொழியான தமிழில் அதனை அனுப்பி வைக்குமாறு அவர் கோரியுள்ளார்

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலே வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 4-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

...வத்திக்கானுக்குள் என்ற நிலையை மாற்றினுர்

பாப்பரசர்கள் வத்திக்கான் என்ற குறுகிய பிரதேசத்தினுள் அடங்கி ஒடுங்கிக் கிடந்தநிலையை மாற்றி ஆயன் தன் ஆடுகளை அறிய வேண்டும் என அறிக்கையிட்டார் அக்கொள்கைக்கிணங்க 1964-ம் ஆண்டின் ஆரம்பத்தில் இரட்சகர் இயேசு பிறந்து வளர்ந்து பாடுபட்ட மரித்த புண்ணியபூமியாம் பலஸ்தீனுவுக்கும் வருகைதந்தார். இஸ்ரவேல், ஜோர்தான் என இரண்டாகப் பிளவுபட்டு நின்ற பாலஸ்தீன தேசம் புண்ணியர் சின்னப்பரின் வருகையால் பகையைமறந்து அடைபட்ட வாயில்களைத்திறந்துவைத்து பாப்பரசரையும் உபசரித்தனுப்பியமை கண்டு அகிலமே பூரித்தது.

அவ்வாண்டின் இறுதியில் பாரதநாட்டில் பம்பாய் நகரத்தில் இடம்பெற்ற அனைத்துலக நற்கருணை மகாநாட்டுக்குத் தலைமைதாங்கச் சென்றர். கத்தோலிக்கர் சிறுபான்மையாகவுள்ள இந்திய உபகண்டத்தில். தினசரி அரசியற் குழப்பங்களும் மோதல்களும் நிகழ்ந்து கொண்டிருக்கும் பாரதநாட்டில் அச்சமின்றி காலடி எடுத்துவைத்தார் சின்னப்ப தந்தை. பாப்பரசரின் வருகையை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்தோர் சிலரை பாரத அரசு கைதுசெய்து காவலில் வைத்தது.

அச்செய்தியை அறிந்ததுமே ஜனதிபதி ராதாகிருஷ்ணன், காலஞ்சென்ற பிரதமர் சாஸ்திரி, இந்திரா காந்தி ஆகியோரிடம் அவர்களை விடுதலைசெய்து என்னிடம் அழைத்துவாருங்கள் அவர்கள் அச்சத்தைப் போக்கிஎன்மார்புடன் அவர்களை அணைத்துக்கொள்ள ஆசிக்கிறேன் எனக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டார் பாரத அரசாங்கம் தந்தையின் விருப்புக்கிணங்க கலகக்காரரை விடுதலை செய்தது. ஆயினும் தன் புனித விருந்தினரின் பாதுகாப்பை எண்ணி அவர்களை பாப்பரசரிடம் அழைத்துவர மறுத்துவிட்டது.

ஐ. நா. தலைமையலுவலகத்திற்கு விஜயம் செய்து அங்கு குழுமியிருந்த அனைத்துலக தலைவர்களிடம் உங்கள் உதடுகளில் சமாதானம் பேசுவதை விடுங்கள். உள்ளத்திலிருந்து அமைதிக்குரல எழுப்புங்கள் என இடித்துரைத்தார். கத்தோலிக்க யாத்திரைத் தலங்களில் முன்னணியில் நிற்கும் கருத்[illegible] இம்மணிமகுடத்தையே சூழற்றித் தந்த சின்னப்பர் தொழிலாளர் பிரச்சனைகளில் மேலும் பங்கு பெற்றார்.

19[illegible]ல் சர்வதேசத் தொழிற்சங்க சம்மேளனம் தன் பொன்விழாவைக் கொண்டாடியது. அவ்விழாவுக்குத் தலைமைதாங்கத் தொழிற்சங்கவாதிகள் பாப்புதந்தையையே அழைத்தனர் என்றல் தொழிலாளர், தந்தையிடம் கொண்டுள்ள நல்மதிப்புக்கு ஈடிணையுண்டோ?

கிறிஸ்துவை வழிபடும் கிறிஸ்தவ மதத்தவரிடையே பிரிவினை ஏன் என்று கேட்டார். அமரர் அருளப்ப பாப்பு. கத்தோலிக்க மதத்தில் இருந்து காலத்துக்குக் காலம் பல்வேறு பிரச்சனைகளைத் தொடர்ந்து பிரிந்து சென்றவர்களே இன்று கிறிஸ்தவ மதத்தின் பல சபைகளிலும் உறுப்பினர்களாயுள்ளனர். கிறிஸ்துவை வணங்கும் பல்வேறு பிரிவினரும் ஒன்றுசேரவேண்டும் என அருளப்ப பாப்பு விரும்பினுர். அந்த விருப்பத்துக்கு ஊக்கம் அளித்து வருகிறுர் சின்னப்ப பாப்பரசர்.

திருச்சபைக்கு வெளியே மட்டுமல்ல, உள்ளேயும் ஏற்படும் பிரச்சனைகளை மனதில் வைத்துக்கொண்டு தம் மந்தையை பிற மத அன்பர்களைத் தரிசிக்க நெடுந்தூரப் பயணம் மேற்கொண்டு இறுதியில் இலங்கையிலும் இரண்டு மணி நேரம் தங்கிச் செல்லும் இயேசுக்கிறீஸ்துவின் பிரதிநிதியாம் சின்னப்ப பாப்பரசரின் அமைதிப் பணிகட்கும் ஆக்க முயற்சிகட்கும் நன்றி கலந்த உள்ளத்தால் நன்றி கூறி, இறைவன் அவர் பணியை ஆசீர்வதிக்கட்டும் எனப் பிரார்த்தித்து நிற்போம்.

— —

## சுவாமிநாத தம்பிரான் இந்தியா செல்கிறுர்

யாழ்ப்பாணம், வெள்ளி

சென்னைத் தமிழ் இசைச் சங்கத்தின் 18-வது தமிழிசை விழாவில் கதாகாலட்சேப செய்ய இன்று நல்லை ஞானசம்பந்தர் ஆதீன அதிபர் ஸ்ரீமத் ஸ்வாமிநாதத்தம்பிரான் இந்தியா செல்கின்றுர் 5-12-70 முதல் 3 தினங்கட்கு அண்ணுமலைத்திருக் கார்த்திகை உற்சவத்தில் இன்னிசை விரிவுரையாற்றுவார்.

சுவாமிநாதத்தம்பிரான் 30-12-70 அன்று மீண்டும் இலங்கை திரும்புவார்கள்.



இன்று

## உருவப்படம் திரை நீக்கம்

(உடுப்பிட்டி நிருபர்)

பன்னலை சேர் கனகசபை வித்தியாலய முகாமையாளராக இருந்து சுமார் 30 வருடங்கள் பணிபுரிந்த அமரர் திரு. க. ஸ்ரீசுந்தரமூர்த்தியின் உருவப்படம் இன்று வித்தியாலய மண்டபத்தில் வடமாநிலக்கல்யதிபர் திரு வே. சங்கரலிங்கத்தினுல் திரைநீக்கம் செய்து வைக்கப்படவுள்ளது. இவ்விழாவில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி அதிபர் திரு ஜெயரத்தினம் யாழ். தொழில் நுட்பக் கல்லூரி போதனுசிரியர் திரு. சி. இராமலிங்கம் ஆகியோரும் பேசுவர்.

— —

## ஆசிரியருக்கு பாராட்டு

புலோலி, வியாழன்

நாகர்கோயிலைச் சேர்ந்த திரு கே ஆறுமுகம் 35 வருட ஆசிரியசேவையில் இருந்து இம்மாதக் கடைசியில் ஓய்வுபெறுகிறுர்.

இவர் நாகர்கோயில் மகாவித்தியாலயத்தில் கடைசியாக பணியாற்றி ஓய்வுபெறுகிறுர். இவரின் சேவைநலத்தைப் பாராட்டுமுகமாக இம்மாதம் 9-ம் திகதி பாராட்டு கூட்டம் நடைபெற இருக்கிறது. பாராட்டுக்கூட்டம் பெற்றேர் ஆசிரியர் சங்கத்தால் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

— —

## மோசடி?

முல்லைத்தீவு, வியாழன்

இங்குள்ள பலநோக்குக்கூட்டுறவுச் சங்கமொன்றில் சவ்வரிசி விற்பனையில் மோசடி நடைபெற்றுள்ளது பற்றி கூட்டுறவுப் பரிசோதகர் திரு. பஞ்சலிங்கம் விசாரணை நடத்துகிறுர்

...கள் ஜனவரி முதலாம் திகதியிலிருந்து இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்.

எஸ் துரைசிங்கம் சுன்னுகத்திலிருந்து மல்லாகத்திற்கும், திரு. என் நடராசா ஏழாலையிலிருந்து மயிலிட்டி தெற்குக்கும், திரு. கே கனகசபை மல்லாகத்திலிருந்து ஏழாலைக்கும், திரு. ஆர் எஸ். சேதுபதி கீரிமலையிலிருந்து நெடுந்தீவுக்கும், திரு. பி முருகையா மயிலிட்டி தெற்கிலிருந்து கீரிமலைக்கும் திரு. வி பாலசுந்தரம் மயிலிட்டி வடக்கிலிருந்து மயிலிட்டி கரைக்கும், திரு ஏ எஸ் பத்மநாதன் மயிலிட்டி கரையிலிருந்து வடக்கிற்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்

— —

## நூல்வெளியீடு

யாழ்ப்பாணம், வெள்ளி

திரு. கே பரமோதயம் எழுதிய கல்வியின் நோக்கம் எனனும் நூல் வெளியீட்டு விழா இம்மாதம் 6-ம் திகதி யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும்.

வெளியீட்டுவிழாவுக்கு திரு. ஆர். இராஜரத்தினம் தலைமைவகிப்பார். வடமாநிலக்கல்வி அதிபதி திரு. வி. சங்கரலிங்கம் நூலை வெளியிட்டுவைப்பார்.

(குவிம)

— —

## எம். பிக்களுக்கு கார் கிடைககும்

கோட்டை, வியாழன்

127 ஆட்சிமன்ற உறுப்பினர்கள் மோட்டார் கார் வாங்குவதற்கு விண்ணப்பித்துள்ளனர். இவர்களுக்கு 'பேர்யோ 204' வகையைச் சேர்ந்த கார் 25,000 ரூபாவுக்கும் பேர்யோ 304 வகையைச்சேர்ந்த கார் 28,000 ரூபாவுக்கும் பேர்யோ 404 வகையைச்சேர்ந்த கார் 31,000 ரூபாவுக்குமாக விற்கப்படவிருப்பதாக அமைச்சர் ஒருவர் கூறினுர்.

— —

## 3 தமிழர் தெரிவு

கோட்டை, வியாழன்

தொழிற்செயலக ஆலோசனைக்குழு எழுதுவினைஞர் தேர்தலில் எச். பாலசிங்கம் கே ராஜா, ஐ. வி. குமணப்பிள்ளை ஆகிய மூன்று தமிழர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

57 பேர் போட்டியிட்ட இத்தேர்தலில் ஏழு தமிழர் போட்டியிட்டனர்.

அங்கு பாய்ந்தோடிச் சென்று, 'போட்டோ கமெரா' வைக் கைப்பற்றி, அதிலிருந்த 'பிலம்' மை எடுத்துக்கொண்டு, காமிரா'வை பின்னர் திருப்பிக் கொடுத்தார். கூட்டத்தில் ஒழுங்கும் கட்டுப்பாடும் இருக்கப் பார்த்துக்கொள்ளு ரிகை கூறுகிறது. கருஇனல் வில்லாட் ஒரு பிரெஞ்சுக்காரர் வயது 64. தூரகிழக்கு பிரயாணத்துக்குத் புறப்படுமுன்பாப்பரசர்ஓர் அந்தரங்க வைபவத்தின் போது தமது விருப்பத்தைத் தெரிவித்தாராம்.

# பத்திரிகைச் சட்டத்தை எதிர்க்கவே ரூ.4 லட்சம்

## வழங்க அனுமதித்ததாக 'லேக்ஹவுஸ் தலைவர் சாட்சியம்'

கொழும்பு, வியாழன்

64 ம் ஆண்டு பத்திரிகை சட்டத்தை எதிர்த்து பிரசாரம் செய்வதற்காக 4 லட்சம் ரூபா கொடுக்க சபை அங்கீகரித்தது.

லேக்ஹவுஸ் விசாரணைக் கமிஷன் முன்னிலையில் சாட்சியமளித்த லேக்ஹவுஸ் அதிபர் திரு ஈ. டி. சி. அபயசேகரா மேற்கண்டவாறு கூறினுர்.

அபசேகரா சாட்சியமளிக்கையில் மேலும் கூறியதாவது: லேக்ஹவுஸ் தலைவர் விஜயவர்த்தனவுக்கு 1 லட்சம் ரூபாவும் திரு ஜி பி. எஸ் கோமஸுக்கு 3 லட்சம் ரூபாவும் பத்திரிகைச் சட்டத்தை எதிர்த்துப் பிரசாரம் செய்வதற்கு கொடுப்பதென லேக்ஹவுஸ் சபை அங்கீகரித்தது.

இந்தப் பணம் 65 ம் ஆண்டு தேர்தலில் போக்குவரத்துக்காக பயன்படுத்தப்பட்டிருக்கலாம்.

......

## கி. ச. தேர்தல்

மட்டக்களப்பு, வியா.

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த கல்லாறு-துறைநீலாவணை கிராம சபைத்தேர்தல் இம்மாத இறுதியில் எட்டுவட்டாரங்களில் நடைபெறவிருக்கின்றது.



முன்னுள் அமெரிக்க ஜனதிபதி ஜோன்சனுடன் பாப்பரசர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org